உ

பரமபதி துணை.

தாண்டவராய சுவாமிகள்

அருளிச்செய்த

# கைவல்ய நவநீதம்.

மூலம்.

சுத்தப் பதிப்பு.

எஸ். கந்தசாமி பிள்ளையால்

மதுரை ஸ்ரீ மீனாம்பிகைப் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

விலை] 1949. [அணா 6

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 55 | 16 | ருகக்கூடும் | ருக்கூடும் |
| 57 | 15 | ெருழில் | தொழில் |
| 59 | 5 | மாகுயிர் | மாருயிர் |
| 63 | 11 | தீர்வையி | தீர்வையீ |
| 66 | 19 | யாலியு | யாவியு |
| 68 | 6 | செம்பிய | செப்பிய |
| 71 | 13 | தரவ | தாவ |
| 75 | 8 | மிதியிச | மிதிலட |
| 88 | 12 | கட்டயுழி | கட்டழியு |
| 95 | 3 | காரணங்க | காரணங் |
| 96 | 11 | புத்திபை | புத்தியை |
| 102 | 4 | தருவதே | தருவதே |

அன்பளிப்பு
R.G. துரைப்பாண்டி B.A.,
கோச்சடை, மதுரை.

தாண்டவராய சுவாமிகள்

அருளிச் செய்த

# கைவல்ய நவநீதம்.

மூலம்

சுத்தப் பதிப்பு

எஸ். கந்தசாமி பிள்ளை,

ஸ்ரீமீனாம்பிகை பிரஸ்,

மதுரை.

விலை] 1949. [அணா 8.

# வைராக்ய டிண்டிமம்.

காம: க்ரோதஸ்ச லோபஸ்ச
தேஹே திஷ்டந்தி தஸ்கரா:
ஜ்ஞான ரத்நாப ஹாராய
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத: 1

ஜன்ம துக்கம் ஜராதுக்கம்
ஜாயா துக்கம் புந: புந:
ஸம்சார ஸாகரம் துக்கம்
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத: 2

மாதா நாஸ்தி பிதா நாஸ்தி
நாஸ்தி பந்து ஸஹோதர:
அர்த்தம் நாஸ்தி க்ருஹம் நாஸ்தி
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத: 3

ஆஸயா பத்தலோகே லோகே
கர்மணோ பஹு சிந்தயா
ஆயுக்ஷீணம் நஜாநாதி
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத: 4

பரப்பிரஹ்மணே நம:

# கைவல்ய நவநீதம்.

## பாயிரம்.

பொன்னில மாத ராசை பொருந்தினர் பொருந்தாருள்ளந் தன்னிலந் தரத்திற்சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும், எந்நிலங்களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம், நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி. 1

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேது வா மயனாய் மாலாய், ஆன்றவீ சனுமாய்த்தா னே யனந்தமூர்த் தியுமாய் நிற்கும், பூன்ற முத் தனுமா யின்பப் புணரியா தவனாய் நா னும், தோன்றிய விமலபோத சொரூபத்தைப் பணிகின்றேனே. 2

எவருடை யருளால் யானே யெங்குமாம் பிரம மென்பால், கவருடைப் புவன மெல் லாங் கற்பித மென்றறிந்து, சுவரிடை வெளி போல் யானே சொரூபசு பாவ மானேன், அவருடைப் பதும பாத மநுதினம் பணிகின் றேனே. 3

என்னுடைமனது புந்தியிந்திய சரீரமெல்
லாம், என்னுடை யறிவி னாலே யிரவி முன்
னிமமே யாக்கி, என்னுடை நீயு நானு மேக
மென் றைக்யஞ் செய்ய, என்னுடைக் குருவா
ய்த் தோன்று மீசனை யிறைஞ்சி னேனே. 4

அந்தமும் நடுவு மின்றி யாதியு மின்றி
வான்போல், சந்தத மொளிரு ஞான சற்குரு
பாதம் போற்றிப், பந்தமும் வீடுங் காட்டப்
பரந்த நூல் பார்க்கமாட்டா, மைந்தரு முண
ருமாறு வத்துதத் துவஞ்சொல்வேனே. 5

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்
கடல் மொண்டு முன்னூற், குடங்களில்
நிறைத்து வைத்தார் குரவர்க ளெல்லாங்
காய்ச்சிக், கடைந்தெடுத் தளித்தே னிந்தக்
கைவல்ய நவநீ தத்தை, அடைந்தவர் விடய
மண்டின் றலைவரோ பசியிலாரே. 6

முத்தனை வேங்கடேச முகுந்தனை யெ
னையாட் கொண்ட, கர்த்தனை வணங்கிச்
சொல்லுங் கைவல்ய நவநீதத்தைத், தத்துவ
விளக்க மென்றுஞ் சந்தேகந் தெளித லென்
றும், வைத்திரு படலமாக வகுத்துரை செய்
கின் றேனே. பாயிரம் முற்றிற்று. 7

# தத்துவ விளக்கப் படலம்.

நித்திய வநித்தி யங்கள் நிண்ணயந் தெ
ரிவி வேகம், மத்திய விகபரங்கள் வருபோகங்
களில்நி ராசை, சத்திய முரைக்க வேண்டுஞ்
சமாதியென் றாறு கூட்டம், முத்தியைவிரு
ம்பு மிச்சை மொழிவர்சா தனமிந் நான்கே. 1

சமந்தமம் விடல்சகித்தல் சாமாதானஞ்
சிரத்தை யாறும், சமமகக் கரண தண்டம்
தமம்புறக் கரண தண்டம், அமர் மனை
விவகாரங்களருகலே விடலென்றாகும், அமர்
செயுஞ் சுக துக்காதி யனுபவிப்பது சகித்தல்.

சிரவணப் பொருளைத் தானே சித்தஞ்
சிந்திக்கு மாறு, சரதமா வைக்கு மித்தைச்
சமாதான மென்பர் மேலோர், பரமசற்
குருநூ லன்பு பற்றலே சிரத்தை யாகும்,
வரமிகு சமாதி யாறு வகையின் சொற் பொ
ருளி தாமே. 3

சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா
ருலகிலில்லை, ஆதலா லிந்த நான்கு மடைந்

தவர்க் கறிவுண் டாகும், நூதன விவேகி யுள்ளினுழையாது நுழையு மாகில், பூதசன் மங்கள் கோடி புனிதனும் புருடனுமே. 4

இவனதி காரி யானே னிந்திரி யங்க ளாலும், புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலும், தவனமூன் றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப், பவ மறுஞான தீர்த்தம் படிந்திடப் பதறினனே. 5

ஆனபின் மனைவி மக்க ளர்த்தவே டணைகள் மூன்றில், கானவர் வலையிற்பட்டுக் கைதப்பி யோடு மான்போல், போனவன் வெறுங்கை யோடே போகாத வண்ணஞ் சென்று, ஞானசற் குருவைக் கண்டு நன்றாக வணங்கினனே. 6

வணங்கிநின் றழுது சொல்வான் மாய வாழ் வெனுஞ்சோ கத்தால், உணங்கினே னைய னேயென் னுள்ளமே குளிரும் வண்ணம், பிணங்கிய கோச பாசப் பின்னலைச் சின்ன மாக்கி, இணங்கிய குருவே யென்னை யிரட்சிக்க வேண்டு மென்றான். 7

அன்னதன் சிசுவை யைய னைமீன்
பறவை போலத், தன்னகங் கருதி நோக்கித்
தடவிச்சந் நிதி யிருத்தி, உன்னது பிறவி
மாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்,
சொன்னது கேட்பா யாகில் தொடர்பவந்
தொலையு மென்றான். 8

தொடர்பவந் தொலையு மென்று சொன்
னதைக் கேட்ட போதே, தடமடு மூழ்கி
னன்போற் சரீரமுங் குளிர்ந்துள் ளாறி,
அடருமன் பொழுகு மாபோ லானந்த பாவஞ்
பங் காட்டி, மடன்மலர்ப் பாத மீண்டும்
வணங்கிநின் றீது சொல்வான். 9

சொன்னது கேட்க மாட்டாத் தொண்
டனே னலுஞ் சுவாமி, நின்னது கருணையாலே
நீரென்னை யாள லாமே, உன்னது பிறவி
மாற்று முபாய மொன் றுண்டென் றீரே
இன்னதென் றதைநீர் காட்டி யீடேற்றல்
வேண்டு மென்றான். 10

அடங்கிய விருத்தி யானென் றறிந்த
பின் செறிந்த மண்ணின், குடம்பையுட்

புழுமுன் னூதுங் குளவியின் கொள்கை போலத், தொடங்கிய குருவு மான்ம சொரூபமே மருவ வேண்டி, உடம்பினுட் சீவனைப்பார்த் துபதேச மோது வாரே. 11

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்தி றந்து, தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப், பேராத கால நேமிப் பிரமையில் திரிவன் போதம், ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே. 12

தன்னையுந் தனக்கா தாரத்தலைவனை யுங் கண்டானேல், பின்னையத் தலைவன் தானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத்தீர்வன், உன்னைநீ யறிந் தாயாகி லுனக்கொரு கேடுமில்லை, என்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித்தேனே. 13

என்னைத்தான் சடனு வுள்ளத் தெண்ணியோ சொன்னீரையா தன்னைத்தா னறியா மாந்தர் தரணியி லொருவ ருண்டோ, பின்னைத்தா னவர்க ளெல்லாம் பிறந்திறந்

துழலு வானேன், நின்னைத்தா னம்பினேற்கு
நிண்ணய மருளுவீரே. 14

இன்னது தேகந்தேகி யிவனென வுணர்
வன் யாவன், அன்னவன் தன்னைத்தானென்
றறிந்தவ னாகுமென்றார், சொன்னபின்தேகி
யாரித் தாலமல் லாம லென்றான், பின்னது
கேட்டவையர் பீழையுமா கையுங்கொண்டார்

தேகமல் லாமல் வேறே தேகியார் கா
ணே னென்றாய், மோகமாங் கனவில் வந்து
முளைத்தவ னெவன்நீசொல்வாய், சோகமாங்
கனவு தோன்றாச் சுழுத்திகண் டவனார் சொ
ல்வாய், ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னே
து சொல்வாய். 16

நனவுகண் டதுநான் கண்ட நனவுள
நினைவு நீங்கிக் கனவுகண் டதுஞ்சு ழுத்தி
கண்டதும் வேறென் றேபோல், தினமநு
பவிப்ப தொக்குந் தெரியவு மில்லை சற்றே,
மனதினி லுதிக்கும் பின்னே மறைக்கும
தருளுவீரே. 17

தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப் பிறை காட்டு வார்போல், ஆலத்தி னுடுக்கள் காட்டிஅருந்ததிகாட்டுவார்போல்,தாலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூபமான, மூலத் தைப் பின்பு காட்ட முனிவரார் தொடங்கி னரே. 18

அத்தியாரோப மென்று மபவாத மென் றுஞ் சொல்லும், உத்தியாற் பந்தம் வீடென் றுரைக்கும் வேதாந்த மெல்லாம், மித்தையா மாரோ பத்தாற் பந்தமா மபவா த்த்தால், முத்தியா மிவ்விரண்டின் முந்தியா ரோபங் கேளாய். 19

ஆரோப மத்தி யாசங் கற்பனை யாவ வெல்லாம், ஓரோர்வத் துவினில் வேறே யோ ரோர்வத் துவினை யோர்தல், நாரூடு பணி யாய்த்தோன்றல்நரனுகித்தறியில்தோன்றல் நீரூடு கானல் தோன்றல் நிறந்தலம் வெளியில் தோன்றல். 20

இப்படிப் போல நாம ரூபங்க ளிரண்டு மின்றி. ஒப்பமா யிரண்டற் றென்று யுணர்

வொளி நிறைவாய் நிற்கும், அப்பிர மத்தில் தோன்று மைம்பூத விகார மெல்லாம், செப்பு கற்பனை யினாலே செனித் தவென் றறிந்து கொள்ளே. 21

அதுதானெப் படியென்றக்கா லநாதியாஞ் சீவரெல்லாம், பொதுவான சுழுத்தி போலப் பொருந்துமவ் வியத்தந் தன்னில், இதுகால தத்துவப்பேரீசனுட் பார்வையாலே, முதுமூலசுபாவம்விட்டுமுக்குணம்வியத்தமாமே. 22

உத்தமம் வெளுப்புச் செம்மை யுரைத்திடு கறுப்பு மாகும், சத்துவ குணத்தினோடு ரசோகுணந் தமோகு ணந்தான், சுத்தமோ டழுக்கி ருட்டாச் சொல்லுமுக் குணமு மூன்றாய், ஒத்துள வேனுந்தம்மு ளொருகுண மதிகமாமே.

ஒருவழி யிதுவாம் இத்தை யொருவழி வேறாச் சொல்வர், மருவுமவ் வியத்தந் தானே மகதத்வ மாகு மந்த, அருண்மக தத்து வந்தா னகங்கார மாகு மென்றும், கருவகங் கார மூன்றாக் காட்டிய குணமா மென்றும். 24

இக்குணங் களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயை தோன்றும், முக்குணங் களினுந் தூய்தா முதற்குண மாயை யாகும், அக்குணப் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை எக்குணங் களும்பற் றுதோன் நிமித்தகா ரணனு மீசன். 25

ஈசனுக் கிதுசு ழுத்தி யிதுவேகா ரணச ரீரம், கோசமா நந்த மாகுங் குணமிரா சதம வித்தை, தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயைசீவகோடி, நாசமா முயிர்க்கப் போது நாமமும் பிராஞ்ஞு னமே. 26

அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா நந்தகோசம், சுழுத்திகா ரணசரீரஞ்சொன்னதிம்மட்டு மோக. முழுக்குணத் திரண்டால் வந்த மூலவா ரோபஞ்சொன்னோம். வழுத்துசூக்குமவாரோபவழியும்நீமொழியக்கேளாய்.

ஏமமா யாவி நோத வீசனு ரருளி னாலே, பூமலி யுயிர்கட்கெல்லாம் போகசா தனமுண்டாகத், தாமத குணமி ரண்டு சத்தியாய்ப்

பிரிந்து தோன்றும், வீமமா மூடலென்றும் விவிதமாந் தோற்ற மென்றும். 28

தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணும் விண்ணிற், காற்றதாங் காற்றில் தீயாங் கனலிநீர் நீரில் மண்ணும், போற்று மிவ் வைந்து நொய்ய பூதங்க ளென்று பே ராம், சாற்றுமற் றிவற்றில் போக சாதன தனு வுண்டாகும். 29

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொ டர்ந்து நிற்கும், கோதில் வெண் குணத்தி லைந்து கூறுணர் கருவியாகும், ஓதிய பின்னை யைந்து முளம்புத்தி யிரண்டானான, சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே. 30

இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும், பிராணவாயுக்க ளென்றும் பெருந்தொழிற் கருவி யென்றும், பராவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகம், சுராசுரர் நரர்விலங்காய்த்தோன்றியவுயிர்கட் கெல்லாம். 31

இவ்வுடல் மருவுஞ்சீவ னிலங்குதை சத னென்றுவன், இவ்வுடல் மருவுமீச னிரணி யகருப்ப னவன், இவ்வுடலிரண்டு பேர்க்கு மிலிங்கசூக்குமசரீரம், இவ்வுடல்கோசமூன்று மிதுகனு வவத்தை யாமே. 32

சூக்கும சகமிம் மட்டுஞ் சொல்லினே மிப்பால் தூலம், ஆக்குமா ரோபந்தானுமவ்வட வினின் மொழியக் கேளாய், தாக்குமிவ்வுயிர் க்குத் தூல தனுவும்போ கமுமுண் டாகக், காக்குமவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் தானே. 33

ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி நன்னுன் காக்கி, நந்துதம் பாதி விட்டு நான் கொடு நான்குங் கூட்ட, வந்தன தூல பூத மகாபூத மவற்றி னின்றுந், தந்தன நான்காந் தூல தனுவண்ட புவன போகம். 34

தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவ னாகும், தூலமே மருவுமீசன் சொலும்விராட் புருடனாகும், தூலஞ் சாக்கிரவத்தை சொன்ன

தோரன்ன கோசந் தூலகற் பனையீதென்று
தொகுத்தது மனத்திற் கொள்வாய். 35

சீரிய வீச னார்க்குஞ் சீவர்க்கு முபாதி
யொன்றேல், ஆரிய குருவே பேத மறிவதெப்
படியென் றக்கால், காரிய வுபாதி சீவன்
காரண வுபாதி யீசன், வீரிய மிகுசமட்டி
வியட்டியாற் பேதமாமே. 36

மரங்கள் போல் வியட்டி பேதம் வன
மெனல் சமட்டி பேதம், சரங்கடா வரங்கள்
பேதத் தனியுடல் வியட்டி யென்பார், பரம்
பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பதே சமட்டி
யென்பார், இரங்கிய பலசீவர்க்கு மீசர்க்கும்
பேத மீதே. 37

கற்பனை வந்தவாறு காட்டினேம் காண்ப
வெல்லாஞ், சொற்பனம் போலு மென்றே
துணிந்தவன் ஞானி யாவான், செற்புதை
மழைக்கா லம்போய்த் தெளிந்தவா காசம்
போல, அற்புத முத்தி சேரு மபவாத வழியுங்
கேளாய். 38

அரவன்று கயிறென் றாற்போ லாளன்று தறியென் றாற்போல், குரவன்சொல் லுபதே சத்தாற் கூறுநூ லொளியைக் கொண்டு, புர மன்று புவன மன்று பூதங்க ளன்று ஞானத், திரமென்னும் பிரம மென்று தெளிவதே யபவா தங்காண். 39

படமும்நூ லும்போற் செய்த பணியும் பொன் னும்போற் பார்க்கில், கடமுமண் ணும்போ லொன்றாம் காரிய கார ணங்கள், உடன்முதற் சுபாவ மீறு வொன்றி லொன் றுதித்த வாறே, அடைவினி லொடுக்கிக் காண்ப தபவாத வுபாய மாமே. 40

ஆடண தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யும், ஏடண விகாரஞ் சொன்னீர் யிரண்டுசத் திகளென் றீரே, மூடலாஞ் சத்தி செய்யும்மோகமுஞ்சொல்லுமையா, கேடறக் குருவே யென்னக் கிருபையோ டருள்செய் வாரே. 41

தானிகர் தனக்கா மீசன் தனையுந்தங் களைத் தாங் கண்ட, ஞானிக டமையு மன்றி நாஸ்திக

பாதி யென்னும், ஊனிடை யுயிர்க ளுள்ளத் துணர்விழிக் குருடாம் வண்ணம், வானிலந் திசைகண்மூடும்மழைநிசி யிருள்போல்மூடும்.

பூன்றமாம் பிரமத் துக்கும் புறத்துள விகாரங்கட்கும், ஆன்ற கூடத்தனுக்கு மகத் துள விகாரங் கட்கும், தோன்றிய பேதஞ் சற்றுந்தோன்றுமன் மறைத்து மூடும், ஊன் றிய பவவி யாதி யுண்டாக்கு முபாதி யீதே. 43

ஆதார மறைந்து போனு லாரோப மெங் கே தோன்றும், ஆதார மறையாதாகி லா ரோப மில்லையே யென்றால், ஆதாரஞ் சமம் விசேட மாமென விரண்டு கூறும், ஆதாரஞ் சமமா மெங்கு மாரோபம் விசேடமாமே. 44

சகமதி லிதுவென் சுட்டாஞ் சமானந் தான் மறைந்திடாது, யிகவிது கயிறு மென் னும் விசேடந்தான் மறைந்து போகும், அக மெனுஞ் சமானந்தன்னை யஞ்ஞான மறைத்தி டாது, பகர்விசே டமதாஞ்சீவன் பரமெனு மதனை மூடும். 45

கேவல நிலைதோன் ருமற் கெடுத்தது பஞ்ச கோசஞ், சீவனுஞ் செகத்து மாகிச் செனித்தவிட் சேபமன்றோ, ஆவரணந்தா னேபா ழனர்த்தமென் றுரைத்த தேதோ, மேவருங் குருவே யென்று வினவிடில் மகனே கேளாய். 46

தோற்றமாஞ் சத்தி தானுந் துன்பமாம் பவமா னாலும், ஆற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூல மாகுங் காணீ, ஊற்றமாம் பகற்கா லம்போ லுபகார நிசியா லுண்டோ, மாற்ற மென் னுரைப்பேன்மைந்தா மறைப்பது மிகப் பொல்லாதே. 47

சுழுத்தியிற் பிரளயத்தில் தோற்றமாஞ் சகங்கள் மாண்டும், அழுத்திய பவம்போய் முத்தி யடைந்தவ ரொருவ ருண்டோ, முழு த்தவிட்சேப மெல்லாம் முத்தியிற் கூட்டுகிற் கும், கொழுத்தவா வரணமுத்தி கூடாமற் கெடுத்த கேடே. 48

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான, சத்தியும் பொய்யேயென்றாற்

சத்திசா தனமா வந்த, முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரைவி லங்கால், நித் திரை தெளியு மாபோல் நிருவாண நிலைமெய் யாமே. 49

இம்பரில் நஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யும், அம்பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கால் மாய்ப்பர், வம்பியன் மாயை தன்னை மாயையால் மாய்ப்பர் பின்னைத், தம்பமா மதுவுங் கூடச் சவஞ்சுடு தடி போற் போமே. 50

இந்தமா யையினாற் சீவர்க் கேழவத் தைகளுண் டாகும், அந்தவே ழவத்தை தம்மை யடைவினில் மொழியக் கேளாய், முந்தவஞ் ஞான மூடன் முளைத்தல்கா ணுதை ஞானம், சந்ததங் கண்ட ஞானந் தழல் கெடல் குளிர்மை யாதல். 51

பிரமமாந் தனைம றந்த பேதமை யேயஞ் ஞானம், பரநிலை காணேமென்று பகர்தலா வரணம் மூடல், நானொரு கருத்தால் சீவன்

னாமென முளைத்தல் தோற்றம், குரவன்வாக்
கியத்தால் தன்னைக் குறிக்கொழல் பரோட்ச
ஞானம். 52

தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேக
மும்போய், அத்துவி தந்தா னுதலபரோட்ச
ஞான மாகும், கர்த்தனுஞ் சீவ பேதங் கழி
வதே துக்கம் போதல், முத்தனு மெல்லாஞ்
செய்து முடிந்ததா னந்த மாமே. 53

இதுநினைக் கறியும்வண்ண மிப்படி யொரு
திட் டாந்தம், புதுமையாங் கதை கேள் பத்
துப் புருடரோ ராற்றை நீந்தி, உதகதீ ரத்தி
லேறி யொருவனென் பதுபே ரெண்ணி,
அதனொடு தசமன் றானென் றறியாமல்
மயங்கி நின்றான். 54

அறியாத மயலஞ் ஞான மவனிலை
காணே மென்றல், பிறியாவா வரண மாகும்
பீழை கொண் டழல்விட் சேபம், நெறியா
னன் தசம னுண்டு நிற்கின் றானென்ற சொல்
லைக், குறியாக வெண்ணி நெஞ்சிற் கொள்
வது பரோட்ச ஞானம். 55

புண்ணிய பதிகன் பின்னும் புருடரோன் பதின்மர் தம்மை, எண்ணுநீ தசம ருவை யென்னவே தன்னைக் காணல், கண்ணினிற் கண்ட ஞானங் கரைதல்போ வதுநோய் போதல், திண்ணிய மனதி லையந் தெளிதலா நந்த மாமே. 56

தசபுமான் தனைக்கண் டாற்போல் சற் குரு மூர்த்தி யேயென், நிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டு மென்றான், சுசி பெறுமிலட்சி யார்த்தந் துவம்பதந் தற்ப தங்கட், கசிபத வைக்யஞ் செய்யு மதுசெயு முண்மை கேளாய். 57

விண்ணொன்றை மகாவிண் ணென்றும் மேகவிண் ணென்றும் பாரின், மண்ணொ ன்று கடவிண் ணென்றும் மருவிய சலவிண் ணென்றும், எண்ணுங்கற் பனைபோ லொன் றே யெங்குமாம் பிரம மீசன், நண்ணுங்கூ டத் தன் சீவன் நான்குமை தன்யமாமே. 58

பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டி னுக்கும், வாச்சியம் லெட்சி யந்தான் மலயி

லாப் பிரம மான்மா, காய்ச்சிய பாலி னெய்
போற் கலந்தோன் றுங் கடைந்தெடுக்கும்,
ஆச்சிய மென்ன வுன்னை யறிந்துநீ பிறிந்து
கொள்ளே. 69

பிறிவதெப் படியென் றக்கால் பிண
மாகு முடல் நானென்னும் அறிவினைக்
கொல்லல் வேண்டு மைம்பூத விகார மன்
றோ, வெறியதோர் தருத்தி மூக்கின் விடு
வது போலுன் மூக்கால், எறிபிரா ணனுநீ
யல்லை யிராசத குணவி காரம். 60

கரணமா மனதுபுத்தி கருத்தாவா மவை
யான் மாவோ, தரமுள விரண்டு கோசஞ்
சத்துவ குணவிகாரம், வரமறு துயிலா னந்த
மயனையும் நானென் றோதே, விரவிய தமவஞ்
ஞான விருத்தியின் விகார மாமே. 61

சத்தொடு சித்தானந்தஞ் சமந்திரஞ்
சாட்சி யேகம், நித்தியம் வியாபி யான்மா
நீயது வாவறிந்து, பொத்தொடு சடந்துக்
காதி பொருந்துபே தங்களான, குத்திர
பஞ்சகோசக் குகைவிட்டு வெளியி லாவாய்.

பசுங்கோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே, விஞ்சிய தனுவல்லாமல் வேறொன்றுந் தெரியக் காணேன், அஞ்சன விருளை யோகா னகமென வனுபவிப்பேன், வஞ்சமில் குருவே யென்ற மகன் மதி தெளியச் சொல்வார். 63

முன்புகல் தசமன்புத்தி மோகத்தாலெண்ணி யெண்ணி, ஒன்பது பேரைக் கண்ட வொருவனுந் தனைக்காணுதை, பின்பவனிடையிற் கண்ட பெரியபா ழவனேபாராய், அன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பான் நீயே. 64

தூலசூட் சுமவஞ் ஞானந் தோன்றுமூன்றவத்தை தாமும், காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோ லங்கள், போலவே வந்து வந்து போனதெத் தனையென் பேனுன், ஆலமர் கடவு ளாணையவைக்கெலாஞ் சாட்சி நீயே. 65

எல்லாங்கண்டறியு மென்னையேயறிகொண்டறிவே னென்று, சொல்லாதே சுயமாஞ்

சோதி சுடருக்குச் சுடர்வே றுண்டோ, பல்லார்முன் தசமன் தன்னைப் பார்ப்பதுந் தனைக் கொண்டேதான் அல்லாமற் பதினென் றுனு மவனிடத் துண்டோ பாராய்.

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்டென்றெண்ணும், அறிவற்றகுதர்க்கமூடர்க் கனவத்தைபலமாய்த்தீரும், அறிபடும்பொருள் நீயல்லே யறிபடாப் பொருள்நீயல்லே, அறிபொருளாகுமுன்னை யனுபவித்தறிவாய்நீயே.

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யாரமெல்லாம், மதுரமாக் கியவ தற்கு மதுரந் தான் சுபாவ மன்றே, அதுவிது வெனுஞ்சடங்க ளறிவாக வறிவைத் தந்தே, அதுவிது விரண்டு மாகா வகம்பொரு ளறிவாய் நீயே.

இந்தநீ துவம்ப தத்தி னிலட்சியப் பொருளாமென்றும், பந்தமில் பிரமமேதற்பதந்தனிலிலட்சி யார்த்தம், அந்தமாஞ் சீவனீசனவர்களே வாச்சியார்த்தம், சந்ததம் பேதமாவார் தமக்கயிக் கியங்கூ டாதே. 69

பேதமா னதுவுங்கேளாய் பெயராலு மிடங்களாலும், ஓதரு முபாதி யாலு முடலாலு முணர்வினாலும், பாதலம் விசும்பு போலப் பலநூர மகன்று நிற்பர், ஆதலா லிவர்க்கெந்நாளு மைக்யமென்பதுகூடாதே.

வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாசகப் பொருள் சேராமல், இடராகிற் பொருளாம் வண்ண மிலக்கணை யுரையாற் கொள்வார், திடமான வதுவு மூன்றுச் செப்புவார் விட்டதென்றும் விடலிலா தென்றும் விட்டு விடாததென் றும்பே ராமே. 71

கங்கையிற் கோஷ மென்றுங் கறுப்புச் சேப் போடு தென்றும், தங்கிய சோயந்தேவ தத்த னென்றுஞ் சொல் வார்கள், இங்குதாரணங்க ளாக்கி யிந்தமூன் றுமைகளாலே, ஆங்கநூல் விரோதமான சொல் லெலாம் பொருளாந் தானே. 72

பன்னிய சோய மென்றும் பதங்களின் வாச்சி யார்த்தம், அன்னிய தேசங் கால மவ

னிவ னென்ப வெல்லாம், சொன்னவிவ் விரோதம் விட்டுத் தொடரிலக் கியம்விடாமல், உன்னிடில் தேவதத்த னொருவனை வெளியாக் காட்டும். 73

தத்துவ மெனும்ப தங்கள் பிரமமாய்ச் சாட்சியான, வத்துவை விடாமற் பேதவாச்சியார்த்தத்தை விட்டு, நித்தமு மதுநீயாகும் நீயதுவாகு மென்னும், அர்த்தமு மகண்டமென்றே யபிபத வைக்கியங் காட்டும். 74

கடநீரில் மேக நீரிற் கண்டவா னிரண்டும் பொய்யே, குடவானும் பெரிய வானுங் கூடியொன் றுமெப் போதும், இடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போது மேகம், திடமாகச் சுவாநு பூதி சிவோகமென் றிருந் திடாயே. 75

தஞ்சமாய் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப்பாமல், பஞ்சகோசமுங்கடந்துபாழை யுந்தள்ளி யுள்ளில், கொஞ்சமா யிருப்பும் விட்டுக் கூடஸ்த பிரம மென்னும். நெஞ்சமும்

நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான். 76

அனுபவா னந்த வெள்ளத் தழுந்தியே யகண்டமாகித், தனுகர ணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய், மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண, நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானான். 77

அளிமகன் நெடும்போ திவ்வா றானபின் மனது மெள்ள, வெளியில்வந் திடவு ணர்ந்தான் விமலதே சிகனைக் கண்டான், துளி விழி சொரியப் பாதந் தொழுது வீழ்ந் தெழுந்து சூழ்ந்தான், குளிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான். 78

ஐயனே யெனதுள் ளே நின்றனந்தசன் மங்க ளாண்ட, மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி, உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன், செய்யு மா றொன்றுங் காணேன் திருவடி போற்றி போற்றி. 79

சிட்டனிவ் வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக், கிட்டவா வெனவி ருத்திக் கிருபையோ டருளிச் செய்வார், துட்டமாந் தடைகள் மூன்றுந் தொடராமற் சொரூப ஞான, நிட்டனா யிருக்கி லீதே நீசெயு முதவி யாமே. 80

நீநானென் றிரண்டி லாமல் நிறைந்தபூ ரணமா யெங்கும், நாஞகத் தெளிந்த ஞானம் நழுவுமோ குருவே யென்முன், தாஞகும் பிரமரூபஞ் சற்குரு நூலால்தோன் றும், ஆஞ லுந் தடைக ளுண்டே லனுபவ முறைத்தி டாதே. 81

தடையெவை யெனிலஞ் ஞானஞ் சந்தேக விபரீ தங்கள், படர்செயு மிந்த மூன்றும் பல சன்மப் பழக்கத் தாலே, உடனுடன் வரும் வந்தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத், திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தல் தெளித லாலே. 82

அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுட மாட்டாது, மக்கின ஞானத் தாலே வந்தபக்

தமும்வே வாது, சிக்கெனப் பழகிக் கேட்
டல் சிந்தித்தல் தெளித லாலே, விக்கின
மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே.

பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவ
தஞ்ஞானம், குரவன்வாக்கியநம் பாமற்குழம்
புவ தாஞ்சந் தேகம், திரமறு சகமெய் யென்
றுந் தேகம்நா னென்று முள்ளே, விரவிய
மோகந் தானே விபரீத மென்பர் மேலோர்.

தத்துவ வனுபோ கந்தான் சாதித்தல் கே
ட்டலென்பார், ஒத்துளபொருளுகத்தாலுசா
வல் சிந்தித்தலென்பார், சித்தமேகாந்தமான
தெரிசனந் தெளித லென்பார், நித்தமிப்படி
செய்தக்கால் நிர்வாணம் பெறுவாய்நீயே. 85

எத்தனை நாண்ஞா தாவும் ஞானமு மிருக்கு
முன்பால், அத்தனைநாளும் வேண்டு மப்பா
லோர் செயலும் வேண்டா, நித்தமும் வெளி
போற்பற்றுஞேயமாத்திரமாய்ச்சீவன்,முத்த
ரானவர்விதேகமுத்திபெற்றிருப்பாரென்றும்

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர்
கேளாய், வானிகர் பிரம வித்து வரன்வரி

யான்வரிட்டன், ஆனவர் நாமமாகு மவர்க ளிற் பிரம வித்தின். தானமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன். 87

தீரராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னம், வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன, பாரகா ரியமா னுலும் பலர்க்குப கார மாக, நேரதாச் செய் வர் தீர்ந்த நிலைவிடார் சீவன் முத்தர். 88

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போம் மனத்திற் பற்ருர், தாமரை யிலைத்தண் ணீர் போற் சகத்தொடுங் கூடி வாழ்வார், பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார், ஊமரு மாவா ருள்ளத் துவகை யாஞ் சீவன் முத்தர். 89

பேதகர் மத்தால் வந்த பிராரத்தம் நானு வாகும், ஆதலால் விவகா ரங்க ளவரவர்க் கான வாகும், மாதவஞ் செயினுஞ் செய்வர் வாணிபஞ்செயினுஞ் செய்வர், பூதலம்புரப்ப ரையம் புகுந் துண்பர் சீவன் முத்தர். 90

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன், நின்றது புசிப்பார் வெய்யில் நிலவாய்விண் விழுது வீழ்ந்தும், பொன்றினசவம் வாழ்ந் தாலும் புதுமையா வொன்றும் பாரார், நன்றுதீ தென்னுர் சாட்சி நடுவான சீவன் முத்தர். 91

பின்னைமூ வரிவி ரண்டு பேர்களும் சமாதி யோகம், தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தானுய், உன்னுவோன் வரன் வேற் ருேரா லுணர்பவன் வரியானுகும், அன்னியர் தம்மால் தன்னு லறியா தோன் வரிட்ட னுமே. 92

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னுலு முத்தி, சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்ருல், பெரிதான திருஷ்டதுக்கம் பிரமவித் தனுப விப்பான், வரியானும் வரனுமற்றைவரிட்டனுஞ் சுகமாய்வாழ்வார்.

பிரமஞா னிகளுங் கர்மப் பேதையர் போலே வாழ்ந்தால், திரமறு மஞ்ஞானம்போய்ச் செனியாத வழியே தென்ருல், பரவுமாகாச

மொன்றிற் பற்றாது மற்றை நாலும், விரவின
தோடுங் கூடும் விதயிரு வோரு மாவார். 94

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவ
னய னெடுமா லான, மூவரு மகிழ நோன்பு
முழுவதுஞ் செய்து சன்ம, பாவன மானு
ரென்றுபழமறைமுழங்குமிப்பால், மேவருஞ்
சீவன்முத்தர் விதேகமுத் தியும்நீ கேளாய்.

பஞ்சினை யூழித் தீப்போற் பலசன்ம
விவித வித்தாம், சஞ்சித மெல்லாம் ஞானத்
தழல் சுட்டு வெண்ணீ றாக்கும், கிஞ்சிதா
காமியந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்,
விஞ்சின பிராரத் தத்தின் வினையனு பவித்
துத் தீரும். 96

பொறுமையாற் பிராரத் தத்தைப் புசிக்கு
நாட் செய்யுங் கர்மம், மறுமையிற் றொடர்ந்
திடாமல் மாண்டு போம் வழியே தென்றால்,
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக்
கொள்வார், அறிவுளோ ரறிந்து பூசித் தற
மெலாங் கைக்கொள் வாரே. 97

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடல் நீறாகும், பெரியதா லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் நேரம். உரியசூக் குமசரீர முலையிரும் புண்டநீர்போல், துரியமாய் விபுவாய்நின்ற சொரூபத்தி லிறந்துபோமே.

கடமெனு முபாதி போனாற் ககனமொன் றாறாற் போல, உடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன் முத்தர், அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற, படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும். 99

சொல்லிய மகனே யெங்குஞ் சூழ்வெளி யிருக்க மண்ணைக், கெல்லிய பின்பு தோன் றுங் கிணற்றினு காயம் போல, ஒல்லையாம் பிரம நூலா லுற்றது போலே தோன்றும், எல்லையில் நாமெப்போது மேகமென் றிருந்து வாழ்வாய். 100

கானல்நீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க ளூர், வானமை கயிற்றிற் பாம்பு

மலடிசேய் முயலின் கோடு, பீனமாத்தறிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே, ஞான மெய் மகனே யுன்னை நம்மாணை மறந்திடாதே.

தத்துவ விளக்கப் படலம்
முற்றுப்பெற்றது.

## சிவானந்த போதம்.

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரிலு நீர்வாழுஞ் சாதியுண்டு
அநேககுல மனிதருண்டு
மனிதரிலு மனிதருண்டு வானவரு
மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே
அருமையென வகுத்தார்முன்னோர்.

சிவமயம்.

# சந்தேகந் தெளிதற் படலம்.

நரர்குழி பறித்து மெள்ளநாட்டிய நெடிய
கம்பம், உரமுறக் குத்திக்குத்தி யுறைப்பிக்கு
முபாயம் போலே, பரமசிற் சொரூபந் தன்
னிற் பற்றிய மனோவி ருத்தி, திரநிலை பெறச்
சந்தேகந் தெளிதலை மொழிகின் றேனே. 1

நற்கருத் துடையோ னாகி ஞானவா னாகி
நின்றோன், மர்க்கட நியாயம் போலே மகா
பூத விகாரந் தொட்டு, நிர்க்குண விதேக
முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன, சற்குரு
வினைவிடாமற் சந்தத மனுச ரித்தான். 2

சந்ததம் புருடன் தன்னைச் சாயை போல்
விடாமலன்பாம், மைந்தனை நோக்கிச் சாட்சி
மாத்திர மாய்நின் றாயோ, சிந்தையி லைய
மெல்லாந் தீர்ந்தவோ தெளிவி னுள்ளே,
அந்தரங் கலந்த துண்டோ வனுபவ முறை
செய்வாயே. 3

எனவுரைத் தருளு மாசா னிருபதம் வணங்கி யெந்தாய், சனனவன் காட்டின்மோ கத் தமத்தெழு பேதப் பேய்கள், உனதரு ளுதய வெற்பி லுபதேச வருக்கன் றோன்றி, மன விழி தெரிய ஞான வான்கதிர் பரந்தா லுண்டோ. 4

மந்திர மூர்த்தி தன்னால் மாற்றிய பேய் போனாலும், எந்திர மெழுதிக் கட்டி யினி வரா வகைசெய் வார்போல், முந்தியுன் னுப தேசத் தால் மோகம்போ னாலு மையா, புந் தி நின் றுறைக்கவின்னும்புகலும் விண்ணப்ப முண்டே. 5

ஆகமப் பிரமா ணத்தா லறியென்றும் வாக்குக் கெட்டா, தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றும், சோகமா மனத்திற் கெட்டாச் சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர், மோகமா மிரண்டு சங்கை முளைத்தன பறித்திடீரே. 6

மற்றைமுப் பிரமாணத்தால் வத்துநிண் ணயங்கூ டாதே, உற்றதோர் விடயம் பூத

ரூப யமன் ருத லாலே, குற்றமாங் குணவி சேடங் கூடாம லிருக்கை யாலே, இற்றது வாக்குக் கெட்டா தென்பது மறிவாய் நீயே.

வாக்கியந் தனக்கெட் டாத வத்துவென் றுரைத்த வேதம், வாக்கிய விருத்தி யாலவ் வத்துவைக் காட்டிற் றன்றோ, வாக்கியங் களிலே மான மாவதே தென்று யாகில், வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள் பொய் யாது கேளாய். 8

தன்பதி யல்லாப் பேர்கள் தமையல்ல னல்ல னென்றாள், அன்பனைக் கேட்ட நேர மவள் வெட்கி மௌன மானாள், என்பது போல நீக்கி யிதன்றிதன் றெனச்சே டித்த, பின்பரப் பிரமந் தன்னைப் பேசாமற பேசும் வேதம். 9

முந்திய சங்கை தீரமொழிந் ததையறிந்து கொள்வாய், பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரம்நீகேளாய், இந்தியங் களுக்கி ராசனிதய மா மதினெண்ணங்கள், புந்திபு மனமுமென் றே புறத்தகத் துலாவி யாடும். 10

உன்முகம் போற்கண் ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல், சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும், நின் மனோ விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவும், தன்மநன் மகனே யித்தைத் தானன்றோ ஞான மென்பார். 11

உருக்கிய தராநீர் நாணு வுருவங்க ளானாற் போல, விருத்திகள் கடபடாதி விடயமாய்ப் பரிணமிக்கும் அருப்பல விடய மெல்லா மாபாசன் தோற்று விக்கும், இருட்டினில் விளக்குங் கண்ணு மில்லாமற் பொருள்கா ணாதே. 12

எரிகின்ற விளக்காற் கண்ணு விருட் பொருள் காணல் வேண்டும், தெரிகின்ற பரிதிகாணச் சென்றிடிற் கண்ணே போதும், விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும்வேண்டும், புரிகின்ற விருத்தியொன்றே போதும் மெய்ப் பொருள் காண் போர்க்கே.

விருத்தியும் பலமும் கூடும் விகாரமே மனமென் பார்கள், கருத்தெழு விருத்தி

வேண்டுங் கணக்கினால் மனத்திற் கெட்டும்,
வருத்திய பலமாயிந்த மனத்திற்கெட் டாது
கண்டாய்; அருத்தமிப் படியென்றைய மகன்
றுநீ தெளிந் திடாயே. 14

வேறு.

வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன
வழிகளறிந் தேனினியோர் வசனங் கேளீர்
சஞ்சலமற் றகண்டபூ ரணமாய்ச் சித்தந்
ததாகார மாவதன்றோ சமாதி யோகம்
உஞ்சலையொத் தலைவதுதன் சுபாவ மாகி
யொருகணத்திற் பலவுலகா யுதிக்கு மிந்த
நெஞ்சகம்வத் துவிலசையா திவாத தீப
நிலையடைவ தெப்படியோ நீர்சொல் வீரே.

கருதுமன்றோ குணமூன்று மூன்றி லொன்று
கதித்தெழுந்தால மற்றிரண்டுங்கரந்துநிற்கும்
தருமமிகுஞ் சத்துவமே லான போது
சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம்
மருவுரசோ குணமாகி லுலக தேக
வாதனையாஞ் சாத்திரவா தனையு மாகும்
அருமகனே தமோகுணமே லான போதில்
அசுரசம்பத் துண்டாகு மறிந்து கொள்ளே.

மனதுசத் துவசொரூப மற்றி ரண்டும்
வந்துகலந் தனவவற்றை மாற்றி னுற்போம்,
தனதுசன்மார்க் கத்தைவிடா திருந்தபோது
தமோகுணமும் ரசோகுணமுஞ்சமிக்கும்பின்
னைக், கனபரினு மஞ்சலனம்போம் போனக்
காற் 'களங்கமற்று நின்றவா காசம் போலும்,
நினதுளமப் படியாமப் பிரமத் தொன்ருய்
நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே. 17

களங்கமற்ற கண்ணுடி தன்முன் வேருேர்
களங்கமற்ற கண்ணுடி காட்டும் போது
விளங்கியதன் மயமாகி யபேத மாகி
விகற்பமின்றி நிருவிகற்ப மானுற் போல
அளந்தறியப்படா விபுவாய்ச் சத்தாய்ச்சித்தா
யானந்த மாம்பிரமத் தைக்ய மான
உளந்தெளிந்தபடியிருந்தாலுலகமெங்கே
யுலெவெங்கேயென் றுசங்கையொழித்திடாயே

ஏகமாய் மனமிறந்தாற் சீவன் முத்தர்
இருக்குமட்டும் பிராரத்த மெதினு லுண்பார்
போகமா னதுபுசித்துத் தொலைப்ப தன்ருே
புசிப்பதென்ருன் மனந்தானும்போனதன்றே

சோகமாமனமிறந்தாற் போகமில்லை [டாதே
தோன்றுமெனின் முத்தரென்று சொலக்கூ
மோகமாமிதுதெளியக்குருவேநன்று[தானே
மொழிந் தருள்வாய் தெளிந்ததன்றே முத்தி

மனநாசஞ் சொரூபமென்று மரூப மென்றும்
வகுத்துரைப்பா ரிருவகையா வருமி வற்றில்
வினவாத சீவன்முத்த ரிடத்தி லொன்றும்
விதேகமுத்தரிடத்திலொன்றுமேவுங்கண்
தனதானசத்துவமாய்மனஞ்சேடித்துத்[டாய்
தமசுரசசுகணசித்தல் சொரூப நாசம்
அனகாசத் துவந்தானு மிலிங்க தேக
மடங்கும்போ தடங்குதலே யரூப நாசம். 20

சுத்தமாஞ்சத்துவமேயுண்மையாகுங் [ம்போம்
துகளிருள்போனான்மனமென்சொல்லும்போ
வர்த்தமா னத்தில்வந்த வுணவை யுண்பார்
வருவதும்போ வதுநினைந்து மகிழார் வாடார்
கர்த்தரா மகந்தையைவிட் டகர்த்த ராகிக்
கரணவிருத் திகளவத்தை காண்பா ராகி
முத்தரா யிருக்கலுமாம் புசிப்புங் கூடு
முட்டிலையென் றறிந்துசங்கை மோசிப்பாயே.

விவகார வேளையெலாஞ் சமாதி யென்றால்
விகற்பமன்றோமனமலைந்துவிடாதோவிட்டா
அவதானம்நழுவுமன்றோவென்றயாகில் [ல்
அதற்கொருதிட்டாந்தங்கேளாசை கொண்டு
நவமாகப் பரபுருடன் தன்னைக் கூடி
நயந்துசுக மனுபவித்த நாரி நெஞ்சந்
தவமானமனைத்தொழில்கள்செய்யும்போதுந்
தழுவியனு பவித்தசுகந் தனை விடாதே. 22

தேகத்த னலனாகி யகர்த்த னாகிச்
சீவனன்றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன்
போகத்தை யுண்ப னென்றாற் கர்த்தாவாமே
பூரணமா மகர்த்தனுக்குப் போக முண்டோ
சோகத்தை யறுத்தருளுங் குருவே யிந்தத்
துகளறுக்கவேண்டுமென்று சொன்னையாகில்
மாகர்த்தன் மாபோகி மாத்தி யாகி
வகைமூன்று யவரிருக்கு மகிமை கேளாய்.

செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங்
காந்தச்சிலைமலைமுன் னிரும்புகள்சேட்டிக்கு
மாபோல், செய்கை யுஞ்செய் விக்கையுமற்

றிருக்கு மென்முன் செடமான வுலகமெ
லாஞ் சேட்டை செய்யும், மெய்கலந்த விந்
திரிய விகார ரூப விவகார விருத்திக்கும்
விருத்திதானு, மெய்கலந்தசமாதிக்குஞ் சாட்
சியேநான் வெயில் போலென் றுறைத்தவ
னே விபுமா கர்த்தன். 24

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்தம்
அபத்தியம்பத் தியமெனவூ ணைய்ந்திடாமல்
பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்
போகங்கள்புசிப்பவன்மாபோகியாகும்[போற்
சிறிதுபெரிதுகடனதன்னியங்கணன்மை [ம்
றீமைகள்சேரினும்படிகச் செயல்போற்சித்த
வெறிதிருக்கு மவனே மாத் தியாகி யாவன்
விரதமிம்மூன் றுடையவரே வீடுளோரே.

வேறு.

மெய்யும் கொண்டுபி ராரத் தந்தரு விதி
வழி நின்றிடவும், உய்யுங் கர்மிக ளுக்கனு
குணமாவுறுதொழில் செய்திடவும், செய்யுஞ்
செய்கைமுடிந்தவனென் றுரை செப்புவதெப்

படியோ, நையுந் துன்பம கற்றிய குருவே நலமா வருள்வீரே. 26

ஆடவர் செய்தொழில் மூவகை யாகும வித்தை வசத்துறுநாள், ஏடணை மமதைய கந்தையு ளார்க்கே யிகபரவிவகாரம், வீடனு குவமெனு மிச்சையு ளார்க்கே வித்தைப டிப்ப வெலாம், பாடன்மி குந்தொழிலாற்பல னுண்டோ பரிபூ ரணமானல். 27

குரவர் சிகாமணி யேகே ளீர்நீர் கூறின வழியொக்கும், பரமுட னிகமுமி ழுந்தவ ரன்றோ பழகுவர் மெய்ஞ்ஞானம், விரவுமு யற்சியின் மீண்டவ ரதையினி வேண்டுவ ரோவேண்டார், சிரவண மனனு திகள்வேண் டாவோ சித்த முறைத்திடவே. 28

கிளர்மக னேகேள் தத்துவ மறியார் கேட் டல்செ யக்கடனே, தளர்வறு சிந்தித் தலின் முயல் வார்சிலர் சந்தே கங்களுளார், தெளி தலினிற்பார் விபரீ தப்பேய் தீரா வாதனை யோர், வெளியுரு வாயறி வாய்நிறைவாயினர் வேண்டுவ தொன்றுண்டோ. 29

ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞானிகள் போலே, செய்யா நின்றேன் கண்டேனுண்டேன்சென்றே னெனலாமோ, பொய்யாம் விபரீ தங்கள வர்க்குப் போயின வென்றீரே, மெய்யாம் பிரமவி சாரமி தன்றே வெளியா வுரையீரே. 30

ஓய்ந்தக ளூவிற் கண்டப ழங்கதை யோதுவன் வாதனையால், ஆய்ந்தறி வுற்றவ னப்படி செப்புவ னுபா சனுமாகான், மாய்ந்தத னுடல்வே மளவும் விண்ணவன் மனுடனெனப்படுவான், வீய்ந்தசி தாபா சன்போ மளவும் விவகா ரந்தொடரும். 31

ஆனை லயா குருவே காண்ப தசத்திய மென்றாலும், நானு விவகா ரந்துய ரலவோ ஞானசு கந்தருமோ, போனாலன்றோ நன்றோ நிட்டை பொருந்திடல்வேண்டாவோ, தானே நிட்டை புரிந்தாற் செய்கை தவிர்ந்தவ னெப்படியோ. 32

தெரிதரு மகனே யாரம் பத்தொடு தீரும் விவகாரம், உரியதி யானமும் விவகா ரங்களு

முள்ளத் தொழிலன்றோ, துரியப ரம்பொரு ளானவர் வேறொரு தொழில்செய் வதுமுண் டோ, அரியச மாதிகள் பழகுவ னேலவ னொருட னுமன்றே. 33

உத்தம குருவே யாரு டருமா யொரு தொழி லற்றவருள், சித்தம டங்குதி யானு திகள்சிலர் செய்குவ தென்னென்றால், இத் தல மருவும் பிராரத் தப்பிறி வெப்படி யப்படியே, முத்தரும் வெகுவித மாகுவ ரென்பது முன்னே சொன்னேனே. 34

நல்லவ னேகே னுலகுப காரம் ஞானிகள் விவகாரம், அல்லது வேறொரு பெறுபேறும் மிலை யதனாற் பிணியுமிலை, வல்லசி ருட்டி முதற்பல தொழிலால் வருபுண்ணிய பாவம் எல்லவ ருக்கும னுக்கிர கஞ்செயு மீசனடைந் திலனே. 35

ஈசனு மாயரு வாயுரு வாகியெ மூந்தரு ளுங்குருவே, ஈசனு ஞானியு மொப்பென் றீரே யெப்படி யொப்பென்றால், ஈசனு ஞானியு மம

தைய கந்தையி கந்தநி ஞலொப்பாம், ஈசனு
மாம்பல சீவரு மாமுல கெல்லா மிவனுமே.

எல்லாச் சீவரு மிவனு மென்றீ ரிவன்
தான் முத்தியடைந், தெல்லாச் சீவரு முத்
திபெ ருமலி ருப்பா னேனேயா, எல்லாச்
சீவரும் வெவ்வே ருனலிவனெல்லாமலனே,
எல்லாப் பொருளு முரைத்தருள் குருவே
யிதைநீர் மொழியீரே. 37

அகமெனு மான்மா பூரண மேகம நேகவி
தஞ்சீவர், அகமெனு மந்தக் கரணே பாதிக
ளளவிலை யாதலினல், சகமுழு துங்குளிர் சந்
திர னேகஞ் சலசந் திரர்பலராம், சகமதி
லேரிகு ளகுசிறு குளிசால் சட்டிகு டம்பல
வால். 38

சட்டிகு டங்களி லொன்றுந சித்திடி னதி
னுட் சலசந்திரன், ஒட்டுமு தற்சந் திரனொடு
கூடுமொழிந்தவை கூடாவே, கட்டுமுபாதிந
சித்திடு சீவன் காரண வான்மாவில், கிட்டும
யிக்கிய மூபாதிகெ டாதவர்கேவலமாகாரே.

இவனயன் மால்சிவ ஞகிய வீசமோ டெப் படி யொப்பாவன், சிவன்முதல் மூவரு மகிலசி ருட்டி திதிநா சங்கள் செய்வார், அவர் பிறர் மதிகளு முக்கா லங்களு மறிவார் விபு வாவார், தவமிகு குருவே யிவனுக் கவையிலோர் சற்றுங் காணேனே. 40

வேறு.

தடத்து நீர்நிலாத் திரியொளி யுபய்முந் தழுவுமூர் தனைக்காக்கும், குடத்து நீர் விளக்கினிலொளி யிரண்டுமோர்குடும்பமாத் திரங்காக்கும் அடுத்த மைந்தனே ஞானியு மீசனு மறிவினூற்பிறிவில்லை, கெடுத்தமாயையின் குணங்களால் மேலென்றுங் கீழென்றும் பிரிவாமே. 41

நரரின் மன்னனைச் சித்தரைப் போலவே நாரணன்முதலான, சுரர்கண்மாயைவல் லவரணிமாதிகடொக்கமா தவயிக்கோர், தரணி மானுடர்க் கவைகளில் லாமையால் தாழ்வுள ராஞலும், பிரம பாவனை யாலிவ ரவரெனும் பேதமொன் றிலைபாராய். 42

முத்தி நல்கிய சற்குரு வேபல முனிகளுக் கணிமாதி, சித்தி பூமியிற் கண்டிருக் கவுமந் தச் செல்வமீ சனதென்றீர், புத்தியொத்திட வுரைத்தரு ளென்றிடிற் புகழுமீ சனைநோக் கிப், பத்தி செய்திடுந் தவத்தினுல் யோகத் தாற் பலித்ததென் றறிவாயே. 43

சிவசொரூபமாந் தேசிக மூர்த்தியே சித்தி முத்திக ளிரண்டும், தவமுளோரடை குவரெ னிலவர்கள்போற் சகலருமடைவாரே, அவர் கள் பூருவஞ் சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோமே, இவர்கள் ஞானிகளென்றிடிற் சித்திக ளிவர்க்கிலா வகையேதோ. 44

காமி யத்தவங் காமிய மொன்றையுங் கருதிடாத்தவமென்றும், பூமியிற்றவமிருவகைச் சித்தியும் போதமுந் தருமைந்தா, ஆமி வற்றி லொன் றியற்றிஞ லொன்றையே யடைகுவ ரிதுதீர்வை, யாமு ரைத்தலவ் விரண்டையு மியற்றிஞ ரன்றுள பெரியோரே. 45

அனக மைந்தனே முத்திஞா னத்தையே யடைந்தன ரல்லாமல், ஜெனகன் மாபலிபகீ

ரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ, இனியசித்தியே விரும்பினார்சிலர்சில ரிரண்டையும் மூயன்றாரம், முனிவர் சித்திகள் விநோதமாத்திரந்தரு முத்தியைத்தாராவே.

யோக ஞானமே முத்தியைத் தருமென லொழிந்தசித் திகள்வேண்டி, மோகமாயுடல் வருந்தினார் சிலசில முத்தர்களனென்றால் போக மாய்வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன்றோ நசித்தேகும், ஆகை யாலந்தச்சித்திகள் பிராரத்த மாகுமென் றறிவாயே. 47

இலக்க மாயிரஞ் சுருதியா லூகத்தாலென் மன மஞ்சயாமல், பெலக்க வேண்டுமென் றருள்குரு வேயகப் பிராந்திபோய்த் தெளிவானேன், துலக்க மானகண் ணாடியையடிக் கடி துலக்கினாற் பழுதன்றே, அலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமிர்தங்கள் தெவிட்டாவே. 48

கைத வங்களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனையாளும், ஐய னேகுரு வே

யெவ ராகிலு மனுபவித் தாலன்றிச் செய்த
கர்மங்கள் விடாவென்ற வசனமுஞ் சென்ம
சஞ் சிதம்வேவத், துய்ய ஞானத்தீச் சுடுமெ
ன்ற வசனமுந் துணிவதெப் படிநானே. 49

சீவ பேதங்க ளளவிலை மைந்தனே செய்
கையுமளவில்லை, யாவ வாமவரவர திகாரங்க
ளறிந்துபக் குவம் நோக்கிப், பூவ லர்ந்துபின்
பலங்கள் காட்டுவனபோற் பூருவஞ் சித்தாந்
தம், காவல் வேதங்க ளிரண்டையும் வசனிக்
குங் காண்டமூ வகையாலே. 50

ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய
மானாலும், தானமந்திர விரதவோமங்களால்
தவிருமென் பதுபொய்யோ, ஈன மாம்பல
சன்மசஞ் சிதவினை யெத்தனை யானாலும்,
ஞான மாங்கனல் சுடுமென்ற மறைமொழி
நம்பினால் வீடுண்டே. 51

என்ம னந்திருக் கோயிலாத் தினங்குடி
யிருந்தருள் குருமூர்த்தி, சென்ம சஞ்சித
வினைகள்வே ரறுத்திடுந் தேவனே மெஞ்ஞா

னமே, தன்ம யந்தரு மகிமையை விபுதராஞ் சமர்த்தரு மறியாமல், கன்ம மாங்குழியினில் விழுந் தழிகின்ற காரண முரையீரே. 52

அழிவி லாததற்பதந்தனை மைந்தனே யக முகத் தவர்சேர்வர், வழிந டப்பவர் பராமுக மாயினுன் மலர்ந்தகண் ணிருந்தாலும், குழி யில் வீழ்வர்கா ணப்படி வெளிமுகங் கொண் டுகா மிகளானோர், பழித ரும்பிற விக்கட வழுந்துவர் பரகதி யடையாரே. 53

சிறந்த நன்மையுந் தீமையு மீசனார் செய் விக்குஞ் செயலன்றோ, பிறந்த சீவர்க ளென் செய்வா ரவர்கள்மேற் பிழை சொல்லும்வழி யேதோ, துறந்த தேசிக மூர்த்தியேயென்றி டிற் சுருதிநூற் பொருள் மார்க்கம், மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்த னே யதுகேளாய். 54

திகழ்ந்த வீசனார் சிருட்டியுஞ் சீவனார் சிரு ட்டியும் வெவ்வேறே, சகந்த னிற்பொது வீசனார் சிருட்டிகள் சராசரப் பொருளெல்

லாம், அகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல்லாம், இகழ்ந்த சீவனார் சிருட்டிக ளாகுங்கா ணீசனார் செயலன்றே.

மூவராம் பரன்சிருட்டிகளுயிர்க்கெல்லாம் முத்திசா தனமாகும், சீவனார்செயுஞ் சிருட்டிகள் தங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும், தாவ ராதிகள் நசித்திடி லொருவர்க்குஞ் சனனங்கள் நசியாவாம், கோப மாதிகள் நசித்திடிற் பந்தமாங் கொடும்பிற விகள்போமே.

ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெவர் பவ மொழிந்தார்கள், தேசகாலதே கா்திக ளிருக்கவுஞ் சீவகா ரியமோகம், நாசமாகிய விவேகத்தி னுயிரொடு ஞானமுத் தர்களானார், பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன்றே. 57

அச்சு வத்தமென் றொருமர மதிலிரண் டரும்பற வைகள் வாழும், நச்சு மங்கொரு பறவையம் மரக்கனி நன்றுநன் றெனத்தின்னும், மெச்சு மங்கொரு பறவைதின் றதெனா

வியங்கியப் பொருளாக, வைச்சு மாமறை
சீவனை யீசனை வகுத்தவா றறிவாயே. 58

இந்தச் சீவனால் வருமறு பகையெலா மிவ
ன்செய லென்னாமல், அந்தத் தேவனால் வரு
மென்ற மூடர்க ளதோகதி யடைவார்கள்,
இந்தச் சீவனால் வருமறு பகையெலா மிவன்
செய லல்லாமல், அந்தத் தேவனா லன்றெ
னும் விவேகிக ளமலவீ டடைவாரே. 59

நலமெய் யையனே யனைவர்க்குந் தெய்வ
நாயகன்பொதுவானால், சிலரைவாழ்வித்தல்
சிலரொடு கோபித்தல் செய்வதே னென்று
ரேயல், குலவு மக்களைத் தந்தைபோற் சிட்ட
ரைக்குளிர்ந்து துட்டரைக்காய்வன், கலைகள்
நல்வழி வரச்செயுந் தண்டமுங் கருணை
யென் றறிவாயே. 60

மனைவி லங்கறு மைந்தனே கற்பக மரங்க
னல் புனல் மூன்றும், தனையடைந்தவர் வறு
மையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாளும்,
அனைய வீசனு மடைந்தவர்க் கருள் செய்வ

ணநன்றவர்க் கருள் செய்யான், இனைய குற்றங்க ளெவர்குற்ற மாகுமென் றெண்ணிநீ யறிவாயே. 61

ஒன்று கேள்மக னேபுமான் முயற்சியாலுரைத்துமா நடர்க்கீசன், நன்றுசெய்யவே காட்டிய நூல்வழி நடந்துநல் லவர்பின்னே, சென்று துட்டவா தனைவிட்டு விவேகராய்ச் செனித்தமாயையைத்தள்ளி, நின்றுஞானத்தை யடைந்தவர் பவங்கள்போம் நிச்சய மிதுதானே. 62

இந்த ஞானந்தான் வருவதெப் படியெனி லிடைவிடா விசாரத்தால், வந்த டைந்திடும் விசாரந்தா னேதெனில் மனுதியாஞ் சரீரத்தில், இந்த நானெவன் சித்தெது சடமெது விரண்டுமொன் றுகக்கூடும், பந்த மேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமதாகும்.

போன சன்மங்கள் தமிலனுட் டித்தநற் புண்ணிய பரிபாகம், ஞானமாக்குமே விசாரமே னென்றிடில் நாமுரைத் திடக்கேளாய்,

ஆன புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயி னசுசி
போஞ்சுசியாகும், மான தம்பினை விசாரித்து
ஞானத்தை மருவுமென் றறிவாயே. 64

பக்தியும்வயி ராக்கிய மும்பர லோகமு
மணிமாதி, சித்தி யுந்தவ நிட்டையும் யோக
மும் தியானமுஞ் சாரூப, முத்தி யுந்தரும்
விசித்திர கருமங்கள் மோகமாத் திரந்தனு
ரும், புத்திதந்திட லருமையோ விசாரமென்
புண்ணிய குருமூர்த்தி. 65

வேட மாறிய பேர்களை யறியவேவேண்டி
னூல் மகனேகேள், கூடமாமவர் சுபாவங்கள்
சீலங்கள் குறிகளாய்ந் தறியாமல், ஓடி யுங்
குதித் துந்தலை கீழ்நின்று முயர்ந்தகம் பத்
தேறி, ஆடி யும்பல கருமங்கள் செய்பினு
மவருண்மை தெரியாதே. 66

இன்ன வாறந்தப் பிரமத்தை யறிவிக்கு
மிலக்கணத் தால்வேதம், சொன்ன ஞான
மும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல்
படித்தாலும், அன்னதானங்கள் தவங்கள்மந்

திரங்களா சாரங்கள் யாகங்கள், என்ன செய் யினுந் தன்னைத்தா னறிகின்ற திவைகளால் வாராதே. 67

துளங்கு தர்ப்பண மழுக்கறக் கைக்கொ ண்டு துலக்கினுற் போமன்றி, விளங்கு புத் தியா லுலகிலார் துலக்கினுர் விமலதேசிக மூர்த்தி, களங்க மாகுமஞ் ஞானமு மப்படிக் கருமத்தாற் கழுவாமல், உளங்கு றித்தஞா னத்தினு லெப்படி யொழியுமீ தருள்வாயே.

தர்ப்ப ணத்தினிற் களிம்புவாஸ் தவமலஞ் சகசமா தலின்மைந்தா, கற்ப ளிங்கினிற் கரு நிறஞ் சகசமாக் கறுத்தகன் ருரோபம், தர்ப் பணத்தினி லழுக்கற வேண்டினுற் சாதனத் தொழில் வேண்டும், கற்பளிங்கிலாரோபமே கறுப்பெனக் கண்டிட மனம்போதும். 69

இங்கு மப்படிச் சச்சிதா னந்தத்தி லிடர் சடம் பொய் மூன்றும், தங்கு மாயையின் கற்பித மன்றியே சகசவாஸ் தவமன்றே, பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள்

பகைசெயா துறவாக்கும், துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தைச் சுடுகின்ற நெருப் பாமே. 70

மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்த வன் வருடநூ றழுதாலும், நினைத்து ணர்ந்த பின் கிட்டுமெப்படியிந்த நின்மல வான்மாவும், அனர்த்த மானதன் மறதியைக் கெடுத்துத் தன் னறிவினாற் காணுமல், கனத்தகர்மங்கள் நூறுகஞ் செய்யினுங் காணுமோ காணுதே.

நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞான மே யெனும் வேதம், தன்ம பாவமிச் சிரங்க ளால் தேவர்கள் தருவிலங்குகள்மாந்தர், செ ன்ம மாகுவ சாதியா சாரமே செய்தவஞ் சுக மென்று, கன்ம காண்டத்தில் விதித்ததென் விதித்துள காரண முறையீரே. 72

தினமும்மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கி யே தீம்பண்ட மெதிர்காட்டிக், கனமருந்துக ளொழித் துவைத் தழைக்கின்ற கருணைநற் றுய்போலே, மனைய றங்கள்செய் மகங்கள்

செய் நன்றென்று மலர்ந்தவா சகஞ்சொல் லும், நினைவுவேறுகாண் சுவர்க்ககாமிகளந்த நிண்ணயந் தெரியாரே. 73

போக மாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பேகாண், ஆக மங்களுஞ் சுபாவத்தை விதிக்குமோ வத்தனை தெரியாதோ, காக மேகறுத் திடுநெருப் பேசுடு கசந் திடு வேம்பேநீ, வேக வாயுவே யசையென வொருவரும் விதித்திடல் வேண்டாவே. 74

கள்ளுமூனும்நீ விரும்பினால்மகங்கள் செய் காமத்தின் மனதானால், கொள்ளும் பெண் டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெ லாந் தொடானென்றே, தள்ளும்வேதத்தின் சம்மதஞ் சகலமுந் தவிர்வதே கருத்தாகும், விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ நியம மாம் விதியன்றே. 75

மதுவி றைச்சிக ளுண்ணென்ற சுருதியின் மணந்துபா ரெனல் பாராய், மிதுன விச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்ற

விதிபாராய், இதையும் விட்டொழியதிநயிட்டிகவன்னிக்கிகழ்ச்சியற் றதும்பாராய்,அதையறிந்துகன் மங்களா சைகளொழிந் தானந்தமடைவாயே. 76

உலக மானவஞ் ஞானமுங் கருமமு முறவென்ற வழிகூடும், பலவு மானவஞ் ஞானமுஞானமும் பகையென்ப துளதானல், நிலவிலேமறுப் போலவஞ் ஞானமும் நிமலஞானத்தோடே, குலவி நின்றிந்தச் சிருட்டிகள் செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி. 77

சொரூப ஞானமும் விருத்திஞா னமுமெனச் சோதிஞானமு மிரண்டாம், சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த் தோன்றும்வே றிலைமைந்தா, சொரூப ஞானமஞ் ஞானசத் துருவன் று சுழுத்தியிற்கண்டாயே, சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும்விருத் தியின்ஞானம். 78

துருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாததற்சொரூபஞா னந்தானே, விருத்தி ஞான

மாய்ச் சுட்டதெப் படியெனில் வெய்யிலா வுலகெங்கும், பரித்த சூரியன் சூரிய காந்தத் திற் பற்றியக் கினியாகி, எரித்த வாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென் றறி வாயே. 79

அருளு மையனே திரிவித கரணத்தா லாகிய தொழிலெல்லாம், கரும மல்லவோ விருத்திஞானமுமந்தக் கரணகாரியமன்றோ, உரிய கர்மமஞ் ஞானத்தைக் கெடுக்குமென் றோதினுலாகாதோ, பெரியஞானமென்றதற் கொரு பெயரிட்ட பெருமையையுரையீரே.

விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு விருத்தியா கிலுமைந்தா, ஒருத்தி மக்களே தங்களிற் பகைக்கின்ற துலகெங்குங் கண் டோமே, கருத்தனுகிய புருடதந் திரங்க ளாங் கருமங்க ளவைபோலே, வருத் தஞான மோ புருடதந்திரமன்று வஸ்துதந்திரமாமே.

வருத்த கர்மங்கள் செய்யவுந் தவிரவு மற்றொன்றாக் கவுங்கூடும், யிருத்த ஞானமப் படியன்று தியானமும் விவேகஞா னமும்

வேறே, செகத்திலொன்றையொன்றுவிவன் பாவிக்குந் தியானங்கற் பிதயோகம், முகத்த மாக்கண்ட ஞானமே வாஸ்தவ மோகமாய் மயங்காதே. 82

கண்ட றிந்தது ஞானங்கேட் டது தனைக் கருதுபா வனையோகம், கண்டபேர் சொலக் கேட்டது மறந்துபோங் கண்டது மறவாதே, கண்ட வஸ்துமெய் தியானவஸ் துக்கள்பொய்கறுவியஞ்ஞானத்தைக்,கண்ட வக்கணங் கொல்வது ஞானமே கருமமன் றறிவாயே. 83

சருவ முத்தியைத் தருகின்ற தியான முஞ் சத்திய மன்றென்றால், சருவமுத்தியுஞ் சத்திய மன்றென்றுசங்கியாதேநீகேள், உரு வங் கேட்டவன் தியானிக்கும் பொழுதிலவ் வுருவம்வாஸ் தவமன்றே, உருவ மாகுமப் பொழுதுகண் ணுற்கண்ட வுருவம்வாஸ் தவ மாமே. 84

சடம தாகிய தியானமெய் யாகிய சர்வ முத் தியைநல்கும், திடம தானதெப் படி

யெனிலவரவர்தியானமேபிறப்பாகும், உடல
மாசையால்தியானிக்கில் தியானித்த உடல்க
ளாகுவர்மைந்தா, தொடர்பவங்கேடச்சொரு
பமே தியானிக்கிற்சொரூபமாகுவர்மெய்யே.

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும்
பிரமமாகுவரென்றால், நரசரீரமாங் குரவனே
விசாரமேன்ஞானமேனென்றதே, பரம பா
வனை பரோட்சமாம் பின்பந்தப்பரோட்சமே
யபரோட்சம், திரவி சாரமா ஞானமேமுத்தி
யாந் தீர்வையி தறிவாயே. 86

வீட தாம்பரி பூரணசொரூபத்தில் விருத்
திஞா னமுங்கூடிச், சேடமாகிறலகண்டமா
மநுபவ சித்தியெப் படியென்றால், சாடி நீர்
மண்ணைப்பிரித்ததேற் றம்பொடிதானுமண்
ணொடுமாயும், ஊடி ஞானமு மறிவிலா மை
யைக்கெடுத் தொக்கவே கெடுந்தானே. 87

இந்த நிச்சய முத்தரு ளனுபவ மிருப்ப
தெப் படியென்றால், சிந்தை யற்றபூமண்டல
விராசனுஞ்சிசுவும்போற்சுகமாவர், பந்தமுத்

திகள் மறந்து போமுண்டென்று பலர்சொல் லினகையாவர், அந்தரத்தையுண்டு மிழ்ந்த தோர் கொசுகெனு மவர்களை நகையாரோ.

மலடி மைந்தனுந் தாணுவிற் புருடனும் வான்மலர்முடிசூடி, இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசதம் விலைபேசிக், கலகமாயினு ரிடையினிற் கயிற்றராக் கடித்திருவருமாண் டார், அலகையாயினு ரெனும் விவகாரத்தை யறிந்தவன் மயங்கானே. 89

மாயை யென்பது பொய்யெனி லது பெற்ற வகையெலாம் பொய்யாமே, தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ, சேய சொர்க்கமும் நரகமும் நன்மையுந் தீமையும் பாராமல், தூய சத்துச் சித்தானந்த பூரண சொரூபமா யிருப்பாயே.

பங்க யாசனன் முதற்பல தேவரும் பா ருள பெரியோரும், கங்கை யாதியாந் தீர்த்த முந் தேசமுங் காலமும் மறைநாலும், அங்க மாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய

மெனச் சொன்னால், எங்கள் நாயக னேயத
னுற்குற்ற மில்லையோ மொழியீரே. 91

சொற்ப னந்தனிற் கண்டதைப் பொய்
யென்று சொல்வது பிழையானால், அற்ப
மாயையில் தோன்றிய சகங்களை யசத்தெ
னல் பிழையாமே, சொற்ப னந்தனிற்கண்ட
தைப் பொய்யென்று சொல்லலா மெனில்
மைந்தா, அற்ப மாயையில் தோன்றிய சக
மெலா மசத்திய மெனலாமே. 92

பொய்யை மெய்யென்ற மூடர்புண்ணிய
ரென்று புராணங்கூடப்பிடுமானால், மெய்யை
மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள்விதித்த
சாத் திரமுண்டோ, பொய்ய தேதெனில்
நாமரூ பங்களாம் பூதமா கியமாயை, மெய்ய
தேதெனிற் சச்சிதா னந்தமாய் வியாபிக்கு
மான்மாவே. 93

மாயை யென்பதே துடையரா ரெப்படி
வந்தது வருவானேன், மாயை யென்பது பிர்
மத்தின் வேறெனின் வஸ்துவு மிரண்டாமே,

மாயை யென்பதும் பிரமமு மொன்றெனின் வஸ்துவும் பொய்யாமே, மாயை யென்றமே கங்களுக்கொருசண்ட மாருதகுருமூர்த்தி. 94

அதனை யின்னதென் றுரைத்திடப் படா மையா லவாச்சிய வடிவாகும், இதுதனக்குள துடலியா னுலகுமெய் யெனுமவ ருடையோர்கள், கதையி லாதபொய் வந்ததிப் படி யென்று கண்டபே ரிலைமைந்தா, விதன மாயையேன் வந்ததென் றுற்புத்திவிசாரமற் றதனாலே. 95

அருவ மாகுமா யாவிவித் தைகள்விளை யாடுமுன் தெரியாவே, உருவ மாம்பல கந்தர்ப்ப சேனையா யுதித்தபின் வெளியாகும், பிரம சத்திகள னந்தயா மதைக்கண்டு பிடித்திடல் கூடாதே, பரவு பூதங்கள் கண்டனுமானத்தாற் பலருக்கும் வெளியாமே. 96

காரி யங்களுஞ் சத்தியா தாரமுங் காணு மற் றதுமாயம், பாரில் நின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர் கண்காணும், வீரி யங்

திகழ் வித்தையா யினசத்திவெளிப்படாதது போல, பேரி யற்பிர மத்துக்கு மூலகுக்கும் பிறிதுசத் திகளுண்டே. 97

சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனு மாயாவி, வித்தை காட்டிய விந்திர சாலம்பொய்வித்துவான் மெய்போலப்,புத்தி மைந்தனே சத்திமா னுகிய பூரண வான்மா வின், வத்துநிர்ணயஞ் சொன்னதிட்டாந்தத் தின் வழிகண்டு தெளிவாயே. 98

இல்லை யாகிய சத்தியை யுண்டென்ப தெப்படியெனக்கேட்கில்,புல்லையாதியாமசே தனப் பொருளெலாம் பூத்துக்காய்ப் பனபா ராய், நல்லை யாமக னேயதிற் சிற்சத்தி நடந் திடாதிருந்தக்கால், தொல்லையாய்வருஞ்சரா சர வுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறுமே.

கருப்பை முட்டையுட் பறவைகள் பல நிறங் கலந்தசித் திரம்பாராய், அருப்ப மாஞ் சத்திநியமமில் லாவிடிலசிலாநகர்போலாம், நெருப்பு நீரதாங் கசப்புமே மதுரமாம் நீசனு

மறையோதும், பொருப்பு மேகமாங் கடலெலா மண்களாம் புவனமிப்படிப்போமே. 100

ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய வடிவென்றும், சேர்க்கு நாமரு பப்பயிர் வித்தென்றுஞ் செப்பிய சிற்சத்தி, பேர்க்குமாறெங்ஙன்பிறித்திடப்படாதெனிற் பிரமபாவனையொன்றுப், பார்க்குமாறெங்ஙன் முத்தி யாகுவதெங்ஙன் பரமசற்குரு மூர்த்தி.

வாயுத் தம்பனஞ் சலத்தம் பனம்மணி மந்திர மருந்தாலே, தேயுத் தம்பனஞ் செய்திடலதிலதிற் சிறந்தசத் திகளெங்கே, நீயச் சச்சிதா னந்தமாய் வேறென்று நினைந்திடா திருப்பாயேல், மாயச்சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற் காணேமே. 102

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் விவகரித் திடவேண்டி, நாவி னால் மண்ணைக் குடமென்ப ரக்குடம் நசிப்பது நாவாலே பாவு நாமரூ பங்களை மறந்துமண் பார்ப்பதே பரமார்த்தம், சீவ பேதகற் பிதங்களை மறந்துநீ சின்மய மாவாயே. 103

பூரிக் குங்கன சச்சிதா னந்தத்திற் பொய்
சடந் துயர்மூன்றும், தூரத் தாயினுந்தோன்
றுபாழ்விபரீதந் துடைப்பதெப்படியென்றால்,
நீரில் தோன்றுந்தன் நிழல்தலை கீழதாய் நின்
றலையினும்நேராய்ப்,பாரிற்றோன்றியதன்னை
நோக் கிடிலந்தப் பாழ்நிழல் பொய்யாமே.

ஞானங் காரண மறிபொருள் காரிய
நாமரூ பப்பேய்கள், ஆன தெப்படி யழிந்த
தெப் படியெனவாய்குதல்பலனன்றே, மான
மைந்தனே தீர்க்கசொப் பனசகம் வந்ததும்
பாராமல், போன தும்நினை யாமலுன் போத
மாய்ப் பூர்ணமா யிருப்பாயே. 105

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பரா
முக மாகினு லம்மட்டும், நிசத்திலுள் விழிப்
பார்வையா மிப்படி நிரந்தரப் பழக்கத்தால்,
வசத்தி லுன்மனம் நின்றுசின் மாத்திரவடிவ
மாயிடின்மைந்தா, கசத்ததேகத்திலிருக்கினு
மானந்தக் கடல்வடி வாவாயே. 106

வேறு.

தானன்றி வேறொன்று மில்லாத பூரணச் சச்சிதா னந்தகுணமாய், ஊனின்ற வுயிர் தோறு மொன்றாகு மென்றாலஃதொக்கின்ற படிகண்டிலேன், நானென்ற சீவன்கள் சத் தான வகையொக்கும் ஞானங்கள் வெளிகண் டதால், ஆனந்த மிதுபோல வெளியாக வுதி யாத வடைவேது குருநாதனே, 107

உருவங்க ளிரதங்கள் பரிசங்க ளொருபூவி லொன்றாகு மென்றாலுமே, கரணங்க ளோ ரொன்றிலோரொன்று தெரியுங்கணக்கன்றி வாராதுகாண், அருமந்த சச்சிதா னந்தச்சு பாவங்க ளான்மாவின்வடிவாகிலும், பிரபஞ்ச மயமாம்வி ருத்திபே தத்திறற் பேதங்களா மைந்தனே. 108

தாமதமி ராசதஞ் சாத்துவித முக்குணத் தால்வரும்வி ருத்திமூன்றும், ஆமவை கண் மூடமுங்கோரமுஞ் சாந்தமும்மபிதான மாகு மகனே, எமுறவி ருக்கின்ற சச்சிதாநந்தங்க ளென்றென்று மொன்றாகிலும், நாமுரைக்

கும்விருத் திப்பிரிவி னற்சொரூப ஞானதி பிரிவாகுமே. 109

சடமான மூடத் தருக்கல்லு மண்களிற்சத் தொன்றுமேதோன்றுமால், விடமானகாமாதி கோபத்தி லானந்தம் விளையாது மற்றவைகளாம், திடமான வொழிவாதி சாந்தத்தி லேசச்சி தானந்த மூன்றும் வெளியாம், மடமான மூடங்கள் கோரங்கள் விடுசாந்த மனமாகி லானந்தமே. 110

இகமான குருநாத னேசச்சி தானந்த மெனுமிலக் கணமறிகிலேன், அகலாத சத்தாவ தேதுசித் தரவதே தானந்த மேதென்றிடில், மிகுகால மூன்றுங்கெ டாதிருப் பதுசத்து வேறுபா டறிதல் சித்தாம், மகிழ்காம நுகர்போது சுகமாகு மனுபூதி வாழ்வென்ப தானந்தமே. 111

ஙாசச்ச ரீரத்தி ருக்குஞ்ச ரீரிதனை நால்வேத மாவாக்கியம், நீசச்சிதானந்த மென்றிடினு மாசிரியர் நீபிரம மாகு மெனினும்,

மாசற்றசச்சிதானந்தநா னென்ன விவன்மன்
னுமனு பவமெங்ஙனே, கோசப்பு ரங்களையி
டித்துத் தகர்க்குமத குஞ்சரக் குருநாதனே.

சென்மாந்த ரஞ்செய்த வினைகளுடல் தரு
மெனிற் செல்கால மிவனுண்டலோ, கன்
மானுபவநரக சொர்க்கமெனில் வருகின்ற
காலத்து மிவனுண்டலோ, உன்மாதயாதனு
வுடல்கடவு ளுடல்மனுட வுடல்மாறி மாறி
யழியும், தன்மாய வுடல் கெடினு மிவனிருப்
பதுகொண்டு சத்தென்ப தொக்குமகனே.

இருளாக மூடுஞ்சு ழுத்தியி லிராத்திரியி
லிரவிசுட ரற்றபொழுது, மருளாம லிருளை
யும் பொருளையுந் தெரிகின்ற வகைகொண்டு
சித்தாகுமே, பெருவாழ்வு மிக்கதா னேதன்
னிடத்தினிற்பேராதபிரியமதனால், அருகாத
பிரியஞ்சு கத்தில்வரு மாதலா லானந்தமா
மைந்தனே. 114

அன்னபா னாதிசுக சாதனம தாகையா
லார்க்கும்வெகு பிரியமாகும், இன்னவாறுன்

மாவு மானந்த சாதனமெ னக்கருதல் பொரு
ளல்லவே, சொன்னவான் மாவையொரு சுக
சாத னங்களொடுசொல்லுவா யாகின்மகனே
உன்னதா னந்தம்வே றேதனுப விப்பதா
ருபய வான் மாவு முளவோ. 115

விடயசுக மதில்வருதல் பிரியமாத் திர
மாகும் வெகுபிரிய மான்மா விலாம், விடய
சுகம் வருபிரியம் மாறிவருமான்மாவில்வெகு
பிரியம்மாறு துகாண், விடயசுகம்விடலுமாங்
கொளலுமாமான்மாவை விடுவதெவர்கொள்
வதெவர்பார், விடயசுகபோகங்கள்விடுமவனை
யவனுல்வி டப்படா தொருநாளுமே. 116

வேகின்ற கோபங்க ளாலென்னை நான்
கொன்று விடுகிறே னென்று சிலபேர்,
சாகின்றபடியினல் தன்னையேதான்கொன்று
சாவனெனல் சங்கையலவே, தேகந்த னைக்
கொல்லு மவனுல்வி டப்பட்டதேகமவ னல்
லன் மகனே, ஆகந்த னிற்கோபம லதூதனை
யொருநாளு மான்மாவெ றுப்பதிலையே. 117

தாகப்ப டும்பொருளி லும்மகன் பிரியமாந் தனையனிலு முடல் பிரியமாம், ஆகத்தி லும் பிரிய மிந்திரிய மாங்கரண மதனிலும் பிரிய முயிராம், ஏகப்பி ராணனிலும் வெகுபிரிய மான்மாவி லிந்தவான்மா முக்கியம், ஊகத்தி னற்கௌண மித்தைகர்த் தாமூன்று மோ ரொன்றி லதிகமகனே. 118

கெடலான பொழுதிவன் காணிக்கு மக னை கௌணவான் மாமுக்கியம், விடலாத வுடலம்ப ரிக்குநா னுடலான மித்தையான் மாமுக்கியம், திடமான நன்மைகதி வேண்டி னற் கர்த்தனுஞ் சிவவான் மாமுக்கியம், சட மாயு முத்தியினின் ஞானவான் மாவான தானேம காமுக்கியம். 119

புலியுமனு கூலமெனி லிட்டமாம் பகை செயிற்புதல்வனெனினும்வெறுப்பாம், உலகி லிரு வகையுமல் லாதபுல் லாதியி லுதாசீன மாமாதலான்,மலினமறுசின்மயன்பலவகையு மிப்படி மகிழ்ச்சியில் விருப்ப மிகழான், அல

கிலா னந்தவடி வாகுமுன் சொரூபத்தையா
ராய்ந்து பார்மைந்தனே. 120

மானஞ்சி றந்தகுரு நாதனே யானந்த
வகைகளெத் தனையென்னிலோ, ஞானந்தி
கழ்ந்தபிரமானந்தம் வாசனானந்தம்விடயானந்
தமென், றானந்த மூன்றுவித மெட்டுவகை
யென்பர்சிலரவ்வைந்து மிதியிடக்கம், யான
ந்த வகைசொலக் கேண்மைந்த னேயெட்டு
மிஃதின்ன தின்ன தெனவே. 121

போகத்தில் வருசுகம் விடயசுகம் நித்தி
ரைப் போதுளது பிரமசுகமாம், மோகத்த
னந்தலிற்சுகம்வாசனைச்சுகமுழுப்பிரிய மான்
மசுகமாம், யோகத்தி லுளதுமுக் கியசுகமு
தாசீன முற்றசுக நிசசுக மதாம், ஏகத்தை
நோக்கலத் துவிதசுகம் வாக்கியமெ ழுந்தசுக
ஞானசுகமே. 122

வேறு.

இவ்வா றுரைசெயுஞ் சுகபே தங்களி
னியல்பா மவைசொல மகனேகேள், ஒவ்வா

நனவினி லுழல்வா னிடர்கெடவுறங்குஞ் சயனம துறுநேரம், செவ்வா மனமகமுகமாமதி லொளிர் சித்தின் சுகநிழல் சேருங்காண், அவ்வா றிவனுள மகிழ்வா மனுபவ மதுதான் விஷயசு கானந்தம். 123

ஈனந் தருசுக விடயந் திரிபுடி யிடாமெனமனமசையாமல், சேனந்தன தருலாயத் தனில்விழு செயல்போல் நித்திரை செறிசீவன், தானந் தமில்பர னுடனொன் றுவனொரு தனையல் லதுபிற நினையாமல், ஆனந் தமயனு மாவன் சுகமிகு மதுதா னுயர்பிரமானந்தம். 124

தூங்குஞ் சுகமது பிரமச்சுகமெனல் சுருதிப் பொருள்விழி துயில்வோர்கள், தாங்கும் மலரணைநன்று கச்சிலர் சம்பாதிப்பது தானாகம், தீங்கும் நன்மையு மாண்பெண் முறைமையுந் தெரியா தமளிசெய் பொழுதேபோல் ஆங்குள் வெளிகளு மறியா வனுபவ மதனொலதுபிர மானந்தம். 125

உதவும் புவியினி லொருவ னனுபவ
மொருவன் மனதினி லுதியாதே, மதியுங்
கெடுகிற துயில்கொண் டானந்த மயனன்
றேசுக முறுகின்றான், இதுவிஞ் ஞானமய
ஞ் சிந்தையி னினைவாய் வந்திட லழகன்
றே, சுதைவிண் ணோர்புகழ் குருவே நீரிது
சொல்வீர் சகலமும் வல்லீரே. 126

நெய்யும் வெண்ணெயு மிருபேர் களுமறி
நினைவிற் பிறிவறி வினிலில்லை, செய்புங் கண
வினி லிறுகும் மனதொடு சேருஞ் சின்மய
விஞ்ஞானன்,நையுந்துயர்மனம்நழுவும்பொழு
துணர் ஞானச்சுகமுறு மானந்தன், பெய்யுந்
துளிகளும் நீருங் குளமொடு பாகும்போலிவர்
பிரிவன்றே. 127

ஒன்று கியபிர மானந் தச்சுகமொழிவா
னேன்வெளி வருவானேன், என்றுன் முன்
செய்த கருமம் வெளியினி லிழுக்குஞ்சுழுத்தி
விட்டெழுந்தோனும், நன்றுயினசுகமகலான்
வெளியிலுநடவான்மறதியும்பெறமாட்டான்,

அன்று மௌனவிழுந் துறங்குஞ் சிலகண
மதுவே வாதனை யானந்தம். 128

அந்தக் கணமுட லகமென் றிடர்களி
லலைந்தே சுகந்தனை மறந்தேபோம், முந்தைச்
செயும்வினை சுகதுக் கந்தரு மோனந் தருநடு
வடிவே காண், எந்தப் புருடனு மொருசிந்
தையுமற விருந்தே னெனலனு பவமாகும்,
இந்தப் படிதனு தாசீ னச்சுக மிதுவெ நிச
மெனு மானந்தம். 129

நிசமா னதுமுக் கியமோ குடத்துள நீரன்
றேவெளி யீரந்தான், வசமா வகங்கர மறைந்
தால் நிசமது படிந்தான் முக்கியவகையாகும்,
திசையார் திரிசிய மறியா தேதுயில்செறியா
தேயுடல் தறிபோலே, அசையா தேமதி சம
மாகியநிலை யதுதான் முக்கிய வானந்தம்.

மனுடன் மனுடகந் தருவன் தேவகன்
மாகந் தருவஞெண் பிதிரோடே, பனுமா
ஜானர்கள் கருமத்தேவர்கள் பகர்முக்கியரிந்
திரஞசான் கனமார் பிரஜாபதியென் விராட்

டுபொன் கர்ப்பப் பிரமனென் றின்னோர்கள்,
பினவா னந்தங்கள் நுரையாம் பிரளயவெள்
ளக் கடல்பிர மானந்தம். 131

எவனு கிலுமிந்தத் துரியா தீதத்தி லே
ழாம்பூமியிலிருந்தானேல், அவனைர தன்சுகன்
சிவன்மா லயன்முத லறிவோரனுபவசுகபோ
தம், விவகா ரதிர்சிய மிதுவே யனுபவமென
முன் சொல்லிய விவகாரி, உவமா னமுமறி
மகனே யவனடி யுதிரும் பொடிகளென் முடி
மேலே. 132

வேறு.

இந்தவா றைந்துசுகஞ் சொல்லினோம்
வித்தைசுக மினிமேற்சொல்வோம், முந்தமா
யைபுஞ்சச்சி தானந்தப் பொருளுமே மொழி
யும் போதில், அந்தமா மத்துவித சுகமான்ம
சுகமிரண்டு மங்கே சொன்னோம், தொந்த
மாற்றிய மகனே யின்னமுனக் கையமுண்
டேற் சொல்லு வாயே. 133

குகன்றனையு மெனையுமுல கினையுமீன்
றளித்தருளுங் குருவே கேளிர், புகன்றசச்சி

தானந்தப்பதங்கள் தனித்தனியாகிப்பொருள் வேருனல், உகண்டமன முறைப்ப தெங்ஙன் பரியாய பதங்களைப்போ லுறவு காணேன், அகண்டமா யொருசுவையாய்த் தேனீக்கூட் டியமதுவா யறிவிப் பீரே. 134

குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினல் நீர்மூன்று கூருயிற்ரு, ஒளிதவனஞ் செம்மையென்றபதங்களா லக்கினியு மொருமூன்ருமோ, வெளிமுதலாஞ்சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து விலக்கி வேதம், எளிதறிய மூண் மொழிந்த சத்தாதி யெனும் பிரம மேகந்தானே. 135

நித்தியம்பூ ரணமேகம் பரமார்த்தம் பரப்பிரமம் நிதானஞ்சாந்தம், சத்தியங்கேவலந்துரியஞ் சமந்திருக்குக் கூடஸ்தன் சாட்சி போதம், சுத்தமிலக் கியஞ்சநா தனஞ்சீவன் தத்துவம்விண் சோதி யான்மா, முத்தம்விபு சூக்குமமென் றிவ்வண்ணம் விதிகுணங்கள் மொழியும் வேதம். 136

அசலநிரஞ் சனமமிர்த மப்பிரமே யம்
விமலம் வசனு தீதம், அசடமநா மயமசங்க
மதுலநிரந்தரமகோசரமகண்டம், அசமனந்த
மவிநாசி நிர்க்குணநிட் களநிரவ யவமநாதி,
அசரீர மவிகார மத்துவித மெனவி லக்கா
மநேக முண்டே. 137

இன்னவகை விதிவிலக்குக் குணங்கள்
நன்ருய்ச் சேர்ந்தொருமித் தெல்லாங் கூடிச்,
சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை
யொருபொருளைச்சொல்லுஞ்சொற்கள், பின்
னபத மாம்தனுற் சத்தாதிகுணப்பொருளாம்
பிரம மேகம், அன்னபொரு ளொருமையறிந்
தகண்டபரி பூரணமா யாவாய் நீயே. 138

நிர்க்குணவத் துவின்குணங்க ளுரைப்
பதுதாய் மலடியென னிகரென் ருதே சற்கு
ணனே வத்துநிலை யுரையாமலறியவல்ல சது
ரருண்டோ, நற்குணமே தங்களிந்தச் சீவன்
முத்தி பெறப்பிரம ஞானந்தோன்றச், சொற்
குணங்கள் பிரமத்தின் குணங்களன்று பிரம
மாஞ் சொரூபந் தானே. 139

மோகவிருள் கெடக்கோடி யருணனென்ன
வருகுருவே மொழியக் கேளீர், ஏகபரிபூர
ணமாமென்சொருபமென்னுள்ளத்திலிருக்கும்
வண்ணம், ஆகமங்கள் சொன்னபடியென்னை
யகண் டார்த்தமா வறிந்தேனையா, ஊகமு
மொத் திடவுரைத்தாற் பசுமரத்தி லாணி
போ லுறைக்கும் நெஞ்சே. 140

சத்தேசித் தாகுமய லெனிலசத்தா மசத்
தானாற் சாட்சி யெங்கே, சித்தேசத் தாகுமய
லெனிற் சடமாஞ் சடங்களுக்குத் திதியு மில்
லை, ஒத்தேதோன் றியசத்துஞ் சித்துநல்ல
சுகமாகு மூகத் தக்கோர், வித்தேயன் னிய
மாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் விளைந்தி
டாதே. 141

வீயாத சத்துமுன்னம் விளங்குவது தன்
னாலோ வேறொன் றாலோ, வாயால்வே றெ
னிலதுவு மசத்தோசத் தோவசத்தேன்மலடி
மைந்தன், பேயாகா ரியஞ்செயுமோ சத்தெ
னவிப் படியதையும் பிரித்துச் சொன்னால்,

ஓயாத வவத்தையாங் குதர்க்கவிகற் பங்களை விட் டொழிந்தி டாயே. 142

சுருதியுத்தி யொத்ததுபோ லனுபவமுங் கேள்சுழுத்திச் சுகவா னந்தம், மிருதிவடி வாதலிலவ் வானந்த மேயறிவாம் வேறங் கில்லை, கருதுபிர ளயஞ்சுழுத் தியிரண்டி னும் நீ யிருந்திருளைக் காண்கின் றாயே, இருதயத் திப் படிநோக்கி யேகபரி பூரணமா யிருந்தி டாயே. 143

பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமனு பவம்விடாமல், பலமலரின்மதுப் போலே சச்சிதா னந்தமொன்றும் பரமார்த் தத்தைப், பலபொழுதுங் கண்மூடிச் சமாதி யிருந் தான்விழித்துப் பார்த்தபோது, பலவ டிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்று மொரு படமா ஞனே. 144

இதயமொத்த சற்குருவே நமக்கிதுவே விநோதமன்றி யினிவே றுண்டோ, அதை யுரைத்துமதைநினைத்து மிருப்பதன்றோ ஞா

னிகளுக் கானநீதி, முதலுரைத்த துரியாதீ தமுமேழாம் பூமியுமுக் கியமாமென்ற, பதமு மதின் வகையுமெனக் கெளிதாகத் தெளியும் வணம் பணித்திடீரே. 145

வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞா னபூமிகளே ழென்பார், இனியவற்று ளஞ் ஞானபூமிகளேழைபுமுந்தியியம்பக்கேளாய், தனிவித்துச் சாக்கிரஞ்சாக் கிரமகாசாக் கிர ஞ்சாக்கிரத்தைச் சார்ந்த, கனவுகனுக் கனவு சாக் கிரஞ்சுழுத்தி யென்றெழுபேர் கணித் தார் மேலோர். 146

முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமதுதான் முதல்வித் தாகும், இந்தவறி விற்பண்டி லாவகந்தை முனைபோலா மிது நனுவாம், வந்துவந்து பிறவிதொறுமகமமதை வளருவது மகாநனுவாம், நந்துமகங் கொடு நனவின் மனோராச்சி யஞ்செயலே நனுக்க னுவே. 147

உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல் சொப் பனமெனும்பேருடையதாகும், பண்டு

நனுக் கண்டுமறந் ததைமீண்டும் நினைப்பது சொப் பனநனுவாம், மண்டுமிருள் மூடுவது சுழுத்தியா மஞ்ஞான வகைகள்சொன்னோம், விண்டுநிறை முத்திதரு ஞானபூ மிகளேழும் விளம்பக் கேளாய். 148

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சை விசாரணையி ரண்டாம் பூமியாகும், நலதநுமா நசி மூன்றும் பூமிசத்து வாபத்தி நாலாம் பூமி, சொலுமசஞ்சத் திப்பேரும் பதார்த் தாபாவனைப்பேருந் துரியப் பேரும், மலினமறு மகனே யைந்தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர். 149

துற்சங்க நிவர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சையாகும், நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையாம் நம்பி, முற்சங்க வேடணைகள் விடல்தநுமா னசியிந்த மூன்றினுலும், சற்கங்க மனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவா பத்திதானே.

தத்துவத்தின் மனமுறைத்து மித்தையெலா மறந்த லசஞ் சத்தி யாகும், அத்துவி

தானந்தம்வருந் திரிபுடிபோம் பதார்த் தாபா வனைய தாகும், வத் துநிலை யிருந்தபடியிருந்த மவு னசுபாவந் துரிய மாகும், இத்துரிய பூமி யைமுன் துரியாதீ தப்பதமென் றதுவுங்கே ளாய். 151

முற்புவிமூன் றினுமுலகந் தோன்றுத லாற் சாக்கிரமா மூன்றற்கப்பால், சொற்பன மா மதுவுமெள்ள நழுவுமைந்தாம் பூமியே சுழுத்தியாகும், அற்புதமாஞ் சுகானுபவ மிகு மாறும் புவிதுரிய மதற்கப் பாலோர், கற்ப னையி லாதவிட மதீதமென்று மௌனமாக் காட்டும் வேதம். 152

துரியநிலந் தனைத்துரியா தீதமெனில் மயக்கமென்றுசுருதிமேலோர், அரியதொரு விதேகமுத்தி யதீதமென்பா ரதுகணக்கி லா ரும் பூமி, மருவுசுழுத் தியிற்காட்சி சுழுத்தி யென்பா ரென்பதுநீ மனத்திற் கொள்வாய், பெருமைதரு ஞானபூ மியின்விகற்ப மின்ன மூண்டு பேசக் கேளாய். 153

முன்னிலங்க லேறியழு வருமப்பி யாசி களாம் முத்த ரல்லர், பின்னிலங்கள் வரன் வரியான்வரிட்டனெனுஞ் சீவன்முத்தர்பேத மாகும், சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாங் ஆயமுத்தர், இன்னமுமப் பூமி களின் பெருமைதனை நீயறிய யான்சொல் வேனே. 154

நாலாம்பூ மியில்வருமுன் மூன்றுபூ மியு மடைந்து நடந்து மாண்டோர், மேலானபத மடைந்து பிறந்து மெள்ள மெள்ளவந்துவீடு சேர்வார், மாலான பவத்தில் விழார் முதற் பூமிகிடைப்பதுவே வருத்தம் மைந்தா, காலா னமுதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே. 155

இப்புவியி லிஞ்ஞான பூமியொன்றி லிர ண்டிலடைந் திருந்தா ராஞல், அப்புருடர் மிலேச்சரா கிலுமுத்தர் குருபாதத் தாணை மெய்யே, தப்புரையென் றவர்கெடுவார் நடு வான மறைகளோ சங்கியாதே செப்புமொழி

வழிதிடமா யகம்பிரம மென்றிருந்து தெளிந்திடாயே. 156

பொல்லாத மிலேச்சருக்கும் விதேகமுத்தி தருஞான பூமியென்று, நெல்லாகிமுளைக்குமெனத் தண்டுலமாக் கியகுருவேநீர்சொன்னீரே, இல்லாளுங் குடும்பம் விட்டுச் சந்நியாசம் புகுந்தே காங்கியானோர், அல்லாமல் முத்திபெறு ரென்றுசிலர் சொலுமயக்க மகற்று வீரே. 157

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த சங்கை நன்று தெரியக் கேளாய், கட்டயுழிந் துறவு நால் வகையாகு மவைகளுக் காகும் பேர்கள், பட்டதுயர் கெடுங்குடீ சகம்வெகூ தகமம்சம் பரம ஹம்சம், விட்டகலுந் துறவுக்கு விராகங்கா ரணமன்றி வேட மன்றே. 158

மந்தமுந்தீ விரமுந்தீ விரதரமு மென மூன்று வகைவி ராகம், வெந்துயரம் வரும் பொழுது குடும்பத்தை வெறுத்துவரும் விராகமந்தம், இந்தவுட லனவுமனை தனம்வேண்

டா மெனவிடல்தீ விரமென் பார்கள், அந்த ணர்நூல் மித்தையென விடலதுதீ விரதரமா மறிந்திடாயே. 159

பாவிமந்த விராகத்திற் சந்நியா சங்க ளொன்றும் பலித்திடாதே, தீவிரத்திற குடி சகமும் வெகூதகமு மென்றிரண்டு திறங்க ளுண்டாம், தாவிநடந் திடத்திடமி லாதவர்க் குக் குடீசகமுஞ் சகங்க ளெங்கும், மேவிந டந் திடத்திடமுள் ளவர்க்குவெகூ தகமு மென விதித்தார் மேலோர். 160

இருவகைதீ விரதரத்து மம்சனென்றும் பரமாம்ச னென்றுஞ் சொல்வர், வருமம்ச னுக்குமுத்தி சத்தியலோ கத்தன்றி வாரா தென்பார், பரமாம்ச னுக்குமுத்தி யிவ்வுல கின் ஞானத்தாற் பலிக்குமென்பார், திரமரு வும் பரமாம்சன் தானுமிரு வகையாகச் செப் பக் கேளாய். 161

சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர் களவ ரிற்சிஞ் ஞாசு, மெஞ்ஞான பூமியின்

முன் மூன்றுபூ மிபுள்நடக்கும் விவேகி யா ஞேன், சுஞ்ஞான வானென்போன் சீவன் முத்தி யடைந்திருக்குந் தூய மேலோன். அஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசு மிருவகை யா மதுவுங் கேளாய். 162

பந்தமனை துறந்துசில ரதிதிகளா யிருந் தடைவர் பரம ஞானம், அந்தணர்மன் னவர் வணிகர் சூத்திரரா யிருந்துசில ரடைவர் ஞா னம், இந்தவகைச் சாத்திரத்தும் முலகத்தும் நடப்பதுகண் டிருந்துமைந்தா, சிந்தனையின் மயக்கமென்னே சுருதிபுத்தி யனுபவத்தால் தெளிந்திடாயே. 163

வேறு.

பிறந்ததுண் டானு லன்றோ பிறகுசா வதுதானுண்டாம், பிறந்ததே யில்லை யென் னும்பிரமமா வதுவும் நானே, பிறந்தது நா னென்றாகிற்பிரமமன் றந்தநானே, பிறந்தது மிறந்த தற்ற பிரமமாம் நானே நானே. 164

நானென்ற பிரமமான நானேநா னறியே னென்றால், நானென்ப தேது பின்னை நம்மு

டைப் புந்தி யென்னில், தானது மயக்கந் தன்னில் சாகுமே சாவா தாகி, நானென நிறைந்திருந்த ஞானமாம்நானேநானே. 165

நிறைந்தவா றெந்த வாறு நிலைதெரிந் திலனென் றுயேல், அறிந்ததாஞ் சுழுத்தி தன்னிலானந்தமதுவேயாகும், குறைந்தசுக் கானந் தந்தான் குவலயந் தன்னி லில்லை, நிறைந்ததே யிந்த வான்மா நிதானமிவ் வறிவு தானே. 166

மனத்தினு லெண்ணித் தானே வந்ததிவ் வுலக மாகும், நினைத்திடி லனேகலோகம்நிற் பதிவ் வறிவி லன்றோ, அனைத்தையும் கடந் தப் பாலு மந்தமற் றறிவி தாமென், றெனைத் தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோ ன் நானே. 167

அந்தவா றிருந்து கொண்டே யானந்த மனுப விக்க, எந்தவா றிருந்து கொண்டா லெனக்கிது தெரியு மென்னில், இந்தமூன் றவத்தை தம்மு ளெழுந்திடும் விருத்தி நீக்

கில், அந்தவா றிருந்து நீயு மானந்த மடைய லாமே. 168

வாதனை வசத்தி னாலே வருகிற விருத்தி யெல்லாம், எதினாலடக்கலாகு மென்றுதான் விசாரஞ் செய்யில், போதமா மிராசன்தானை ய்ப் புந்தியைம் புலன்க ளெல்லாம், தாதரா யிருக்கப் பெற்றால் சகலமு மடங்குந் தானே.

விருத்திக ளடக்க வின்னம் விநோத மாம் யோகத் தாலே, துருத்திபோ லூதூ மூச்சைச் சுகமுட னடக்கில் நிற்கும், கருத்த தற்கில்லை யென்னிற் காரண சரீர மாகும், பெருத் ததோ ரவித்தை தன்னைப் பிடிங்கிடி லடங்குந் தானே. 170

காரண சரீரந் தன்னைக் களைவதெவ் வாறென் றோதில், ஆரணம் பொய்சொல் லாதே யதன்பொருளகத்திலுய்த்துப் பூரண மாகுமென்மேற்புவனங்கள் தோற்றமென்று, தாரணை வந்த தாகில் தரித்திடு மவித்தை யெங்கே. 171

அப்படி யிருக்கச் சித்த மலைதலால் விவகா ரத்தில், எப்படிக் கூடுமென்னி லென்னை விட் டொன்று மில்லை, இப்படிக் கண்டவெல்லா மென்மய மென்க ளுப்போல், கற்பித மென்று தானே காண்கின்ற சித்து நானே.

சித்துநா னிறைந்தோ னென்ற திடமற வாதி ருந்தால், எத்தனை யெண்ணி னாலு மேதுசெய் தாலுமென்ன. நித்திரையுணர்ந்த பின்பு நிற்கின்ற கனவே போல, அத்தனை யும்பொய் தானே யானந்த வடிவுநானே.

நானென உடலைத் தானே நம்பினே னநேக சன்மம், ஈனராய்ப் பெரியோ ராகி யிருந்தவை யெலாமிப் போது, கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவி னாலே நானென வென்னைத் தானே நம்பியீ டேறி னேனே. 174

என்னபுண் ணியமோ செய்தே னேது பாக் கியமோ காணேன், நன்னிலந் தனிலெ ழுந்த நாரணன் கிருபை யாலே, தன்னிய

ஞனேன் நானுத் தரியத்தை வீசுகின்றேன்,
தன்னிய ஞான நானே தாண்டவ மாடுகின்
றேன். 175

தத்துவ ஞானம் வந்தசந்தோஷ வதிச
யத்தால், நித்தமா டுவன்கா ணென்ற நிலை
முன்ன மேயறிந்த, சத்திய மதனு லன்றோ
தாண்டவா வென்ற ழைத்தார், அத்தனை மகி
மை யுள்ளோ ரன்னையும் பிதாவுந் தாமே.

வந்ததோ ரிவ்வா னந்த மகிழ்ச்சியா
ருடன்சொல் வேன்யான், சிந்தையி லெழு
ந்து பொங்கிச் செகமெலா நிறைந்து தேங்கி,
அந்தமில் லாத தாயிற் றப்படி குருவே
தாந்த, மந்திர மருளு மீசன் மலரடி வணங்கி
னேனே. 177

வித்தியா னந்தமிந்த விதமென விளம்பி
னேமே, பத்தியா லிந்த நூலைப் பார்த்தனு
பவித்த பேர்கள், நித்திய தரும நிட்டை நிலை
தனை யறிந்து சீவன், முத்தியை யடைந்தி
ருந்து முனிவர ராகு வாரே. 178

ஆரணப் பொருளாம் வித்தை யானந்தம்
விளங்க வேதும், காரணங்க குறைவி லாமற்
கைவல்ய நவநீ தத்தைப், பூரணமாக்கவேண்
டிப் பூர்வமா நன்னிலத்தில், நாரண குருந
மக்கு நவின்றனர் யோகில் வந்தே. 179

குலவுசற் குருவின் பாதக் குளிர்புனல்
தலைமேற் கொண்டால், உலகினில் தீர்த்த
மெல்லா முற்றபேறடைவார் போல, நலமை
யா குங்கை வல்ய நவநீத நூலைக் கற்றோர்,
பலகலை ஞான நூல்கள் படித்த ஞானிகளாய்
வாழ்வார். 180

கைவல்யம் சந்தேகந் தெளிதற் படலம்

முற்றிற்று.

மோக்ஷவதைப்பரணி.

குரவ னடியிணை மருவி யுலகவர்
கொடிய பவவிருள் குலையுமா
றிரவு பகலற நிகழு மறிவொளி
யிதய வெளியினி னிலகவே.

திருச்சிற்றம்பலம்.

# மோக்ஷ சாதனக் கிரமம்.

## சோபான பஞ்சகம்.

வேதநித்த மோத வேண்டும்
அதுவிதித்த கன்மமே
விருப்பமோடு செய்ய வேண்டும்
அது கொடீசன் பூசனை
தீதிலா தியற்ற வேண்டும்
காம்ய கன்ம புத்திபைத்
தெகிக்க வேண்டும் பாவபுஞ்சம்
உதற வேண்டும் பவசுக
மீத நித்தமாதி தோட
மீகவுங் காண வேண்டும்பின்
மெய்யுணர் வனந்த வின்ப
ஆன்மரூபம் அடைய மெய்க்
காதல் செய்ய வேண்டுந்தன்
மனையை விட்டு வெளியிலே
கடுகவோட வேண்டும் நடன
ராச னருளை வேண்டியே. (க)

சாது சங்கம் பண்ணவேண்டும்
சாம்ப மூர்த்தி பத்தியைச்
சலன மின்றிச் செய்யவேண்டும்
சாந்தி தாந்தி யாதியைக்
கோதிலாமற் பழக வேண்டும்
பின்பு கன்ம மியாவையும்
குற்ற மென்று நீக்கவேண்டும்
குண நிறைந்த தேசிகன்
பாத பத்மஞ் சாரவேண்டும்
அவன்ற னேவற் பணிவிடை
பத்தியோடு பண்ண வேண்டும்
பிரண வாக்க ரந்தனை
ஆதரத்தோ டடைய வேண்டும்
சுருதி யீறின் வாக்கியம்
அனைத்துங் கேட்கவேண்டும் நடன
ராச னருளை வேண்டியே. (உ)

அந்த வாக்கி யார்த்தமே
விசாரஞ் செய்ய வேண்டும்பின்
ஆரணைந்த பட்சம் தைப்
பிடிக்க வேண்டும் பின்புநற்

புந்தியால் குதர்க்கந் தன்னைத்
தள்ள வேண்டும் சுருதிக்குப்
பொருந்து தர்க்க மேவவேண்டும்
பின்பு சத்ய ஞானவான்
அந்தப்பிரமம் நானே யென்று
நினைக்க வேண்டும் நாடொறும்
நவில்கருவங் கெடுக்க வேண்டும்
தேகம்நா னெனும் மதி
சந்தியாதே மாற்ற வேண்டும்
அறிஞரோடு வாதமும்
சாந்தமாக்க வேண்டும் நடன
ராசனருளை வேண்டியே. (௫)

பின்னுஞ் சுற்று ரோகந்தன்னைத்
தீர்க்க வேண்டும் நாடொறும்
பிச்சை யன்ன அவுடதத்தை
உண்ண வேண்டும் இட்டமாம்
அன்னவிச்சை நீக்க வேண்டும்
ஆரம்பித்த கன்மத் தால்
அத்தம்வந்த அன்ன மாதி
கொடுமகிழ வேண்டும்பின்

மன்னுதாசி னத்துவம்
விரும்ப வேண்டும் லோகத்தின்
மருவு நிட்டூரந்தலையகண்
மாற்ற வேண்டுஞ்சீதமும்
பன்னுதாப மாதியும்
சகிக்க வேண்டும் வீண்சொலும்
பரிகரிக்க வேண்டும் நடன
ராசனருளை வெண்டியே. (ச)

சுத்தமான தேசத் தில்
சுகாதனத் திருக்க வேண்டும்
சூக்கவத்து வின்மனத்தைச்
சேர்க்கவேண்டும் பின்புநம்
அத்தனும் நடேசன்தந்த
அருளினு லகண்டமாம்
ஆன்மரூபங் காணவேண்டும்
அவற்றினுல் சகத்தை வா
தித்ததாக நோக்கவேண்டும்
சஞ்சித மனத்தையும்
தீர்க்கவேண்டும் ஞானவலியி
னுலேபாவி கன்ம மோ

டொத்தசங்கம் விடுக்க வேண்டும்
இங்ஙனே பிரா ரத்தம்
உண்ணவேண்டும் பின்பு பிரம
மாயிருக்க வேண்டுமே. (ரு)

## சொரூபானு சந்தான துதி.

தானந்த வடிவியாக மாதியி னாலே
தன்மனச் சுத்தியைப் பெற்றுச் சமஸ்த
வூன சுகத்திலுந் துச்ச மதியால்
ஓதும் விராக மடைந் திந்தப்பந்த
மான வினைக ளனைத்துந் துறந்திங்
கந்தணராதிகளியா தொன்றைப்பெற்றார்
மோன சதானந்த பூரண நித்த
முத்த பரப்பிர மம்மது நானே (1)

சத்துப் பிரமத்தி னிட்டை யடைந்து
சாந்த மதியாய்த் தயாநிதி யான
உத்தம வாசானை யாராதித் தன்பால்
உள்ள சொரூபத்தை யோர்ந்தவன் முன்
சுத்தமதியாலே தியானித்துமேலோர் [பாய்ச்
சொச்சொரூபமாக யாதை யடைந்தார்
சத்துச்சித்தானந்த பூரண நித்த
சாந்த பரப்பிர மம்மது நானே (2)

நித்த நிரூபாதி யானந்த மாகி
  நின்மல ஞான சொரூப வொளியாய்
இத்தனை யாகிலு மிச்சக மென்னும்
  இயம்பலு மில்லாத பூரண மான
அத்தன்மைத்தாகினயாதொன்றைமேலோர்
  அகம்பிர மம்மென்னும் விர்த்தியி னூலே
தொத்தர வில்லாச் சொரூபமாய்ப் பெற்றூர்
  துரிய பரப்பிர மம்மது நானே. (3)

யாதை யறியாத தாலிச் சகத்து
  யாவையுந் தோன்றிடுஞ் சத்தியம் போல
யாதைத்தற் சொரூப மாக வறிந்தால்
  யாவு முடனிங்ஙன் தோன்றிட மாட்டா
ஓது மனோவாக்கு யாதொன்றி னுலும்
  உன்னி யுணர்ந்தோத வொண்ணாத தான
நீதிலாப் பூரண சுத்த விமுத்த
  திவ்விய பரப்பிர மம்மது நானே (4)

எந்நம கானந்த வாரிதி தன்னில்
  எழுந்திவலைகொண் டெல்லாச் சகத்துஞ்
சந்தத மாகச் சுகீமுறு மற்றுஞ்
  சலியா விளங்கிடு மியாதொன்றைப் பற்றி

இந்தச் சடசக மியாவும் விளங்கும் [லாத்
இயாதை விசாரிக்கும் போதுமற் றெல்
தொந்தமுந் தள்ளத் தருவதே யாகுந்
தூய பரப்பிர மம்மது நானே. (5)

எந்த மகானந்த சிந்துவி லெப்போ
தீனமில் லாத சமாதிப லத்தாற்
சிந்தனை யாதொன் றுமில்லாமற் சீவன்
சீரோதகம் போல லீனனு மப்போ
தந்தமி லாத வவித்தை விலாச
மாகின விச்சக மியாவையுந் தோன்று
விந்தவி சித்திர மியாதொன்றி லுலாம்
என்றும் பரப்பிர மம்மது நானே. (6)

நேதிநே தியெனும் வாக்கியத் தாலே
நிகில சகத்தை நிடேதித்த பின்னர்த்
தீதில்ச மாதிச் சுகமடைந் துள்ள
திவ்விய புருடரின் ஞான விழிக்கு
யாதொன்று பூரண மாக விளங்கும்
யாதவத் தைமூன்று மில்லாதி ருக்குஞ்
சோதிச தானந்த வத்துவி தேக
சுத்த பரப்பிர மம்மது நானே. (7)

வத்துத் தேசகால மூன்றுக ளாலும்
வரும்பரிச் சேதமில் லாத விபுவா
யெத்துவித கற்பனைக்க திட்டான
மாகியு மேதும் விகாரமி லாதாய்ச்
சுத்தமாய்ச் சங்க விகீன சிவமாய்ச்
சூக்கப் பிரணவ வேத்திய மியாதா
நித்தநி ராகார வேக வெளியாய்
நின்ற பரப்பிர மம்மது நானே. (8)

இந்தச் சொரூபானு சந்தான ரூப
வின்பத் துதிதனை யாதர வோடும்
எந்தப் புருடனற் பத்தியி னோடும்
ஏகாக் கிரசித்த னாகப் படிப்பான்
எந்தப் புருடனு மந்தப் படியே
இந்தத் துதிதனை நித்தமுங் கேட்பான்
அந்தப் புருட னகண்டப் பிரம
மாகுவ னப்படி வேதம் பிரமாணம். (9)

# சீவன் முத்தர்களில்

## பிரம்ம வித்துக்களின் மகிமை

### எழுசீரடி ஆசிரிய விருத்தம்.

திரிவித வுலகத் தருமையார் ஞானஞ் சேர்ந்த சற்புருடரைத் தினமும், பிரிவற நினைந்து பீடுறப்பற்றிப் பேர்தலிற் றுணையெனப் பிறவிக், குரியதோர் தேகந் தானென வுன்று துண்மையாம் வீடதுபெறற்குப், பரிவுடன் பணிந்து பாங்குற வவர்பாற் பழகலே யழ கெனப்பகரும். (1)

குருவென விவரைக் கொள்ளுதல் தகுமாற் குவலயத் தினிலிவ ருக்குத், திருவினை செய்வார் தம்மன மயக்கந் தீர்ந்துதற் பாவமாந் திறத்திற், பொருந்துவர் யாரும் போற்றுறத் தகுவர் பொன்றுத லிற்புக ழுடையர், வருவினை யாவுந் துடைத்தவ ராவர் வயமுள வாய்மையைப் பெறுவர். (2)

ஞானியர் தம்பாற் சிறியவர்நாடி நண்ணினுமன்றிவை திடினும், ஞானியராவர்நாடிலரவரைநகைத்தலும், பழித்தலும்நமக்கேன்

ஆனியாந் தேகத் துறுபவர்க் காகா வான்ற சீர்ப் பிரமவித் துக்கள் தேனினி தாகுஞ் சொரூபமேதமக்குத் தெளிவுடைச்சுகமென வாழ்வார். (3)

வந்துறுபோக வாழ்விறுற் களியார் மாணுறு வாழ்வு நீங்கிடினும், நைந்துளம்நாடார் நாரியர்பக்க லிருக்கினும் நடுநிலை நீங்கார், மூந்அுத லின்றிமூழ்கிலார்கண்டுமுக்குறை கடிந்துமே வருவார், வெந்துறுபடம்போல விளங்குவர் காணில்விரகிலா ரெனமறைவிளம்பும்.

மங்கையர் தம்பான் மதித்து மேவரினு மனந்தனிலம்மயக்கெய்தார், எங்குமோர்வடிவா யுள்ளதஞ் சொரூப மெண்ணியே யிடைவிடா திருப்பார், பொங்கு தலில்லா மனந்தனிற் சிறிதும் புகழிக ழின்றிநின்றிடுவார், தங்குத லைப்போற் றோன்று கற்பனையைத் தரிப்பரோ முத்தர்கள் தாமே. (5)

பழுதைபாம் பெனல்போற் பார்ப்பரிச் சகத்தைப் பாங்குறு தஞ்சொரூபத்தை, முழுதுமே மகிழ்வர் எங்கணும் வெளியாய் மூன்

னுவர் கற்பனே யோர்போல், தொழுதுபூசித் தற் கொருமுதற் காணுர் தொல்புவி யோர வர் வாதில், விழுதுபோ லூன்றி விவகரித்தி டினும் வேறென்ப ரவர்நிலே விளங்கா. (6)

கானனீர் போலக் காண்பரிச் சகத்தைக் கலந்துமே களிப்பர்போற் காண்பர், வானம் போனிற்பர் வந்தனே காணுர் மதிமயக் கின் றியே வாழ்வார், தானமா மெவைக்கு மிரு வினே யேலார் தரணியோர் தீங்குள நினேக் கின், மோனமா ரவரை முடியுமோ செயிக்க மூவருமவர் நிகராமோ. (7)

வேறெனக் காணுர் விரிவுறு சகத்தை விளங்குதல் நினேவினி லென்பார், பேறென லறிவேயன்றி மற்றென்றைப் பேசிடார் நல மெலா மிருந்தோர், சீறுதலில்லார்செறிகுண ராவார் செப்புவர் குளிர்ந்தநல் வார்த்தை, மாறு தலில்லார் மனக்களிப் புள்ளார் மகத் தென விவரலா ருளரோ. (8)

அரிதரிதாகு மவர் நிலேசில மனுருட னின்புசெய்பூசை, பிரியமார் தியானம்பெரும்

புகழிகழ்வு பேசிய வொழுக்கநற் கோலம்,
உரியவாச் சிரமஞ் சாதியுற்றோர்க ளாதிய
விவற்றி லொன்றேனும், கருதிலாரவரை
யுலகெலாம் பணியுங் கடவுளென் றேமறை
கழறும். (9)

சிறியவ ரவரை யெத்தனைச் சேட்டை
செய்யினுந்தெரிகிலார்நெஞ்சில், குறிகொளு
மறிவாஞ் சோதியல் லாமற்கொண்டிலர் வே
றொரு நிலையை, வெறியதா மூலக கற்பனை
கடந்தோர் வியன்கழற்பேணினோர்தாங்கள்,
நெறிகொளுஞ் சொரூப நிலையடைந் தென்
றும் நிகழுவ ரின்ப சாகரத்தே. (10)

சீவன் முத்தர்களில் பிரம்ம
வித்துக்களின் மகிமை முற்றிற்று.

---

## விவேக சட்கம்.

அனித்திய பூதத் தேகநா னன்று
விந்தியத் தரங்கநா னன்று
நனித்தவாங் கார பிராணவர்க் கங்க
ளன்றுநற் புந்தியு மன்று
தொனித்திடுந் தார மனைசெல்வங் களுக்குத்
தூரமாஞ் சாட்சிநா னென்றுந்

தனித்துநித்தியமாய்ப் பிரத்தியகான்மாவாந்
தற்பதப் பொருளதாஞ் சிவோகம். (1)
உற்பவன் விருத்த னன்றுநா ளோர்கா
லத்தினும் நசிப்பவ னன்று
அற்பமாந் தேக காரியமான
அவையெலா மகங்கரத் தல்லால்
தற்பத வடிவாஞ் சின்மயமான
எனக்கிலை சகளநிஷ் களமா
யெப்புறத்தேனு மெல்லையற் றிருக்கும்
இன்பசிற் சொரூபமாஞ்சிவோகம். (2)
சத்திய ஞானு னந்தமாம் பிரமத்
துதித்திடு மாயையிற் சனித்த
மெத்துமிவ் வுலகஞ் சேதனத் திடையே
நசிக்குமத் தேதென விளம்பிற்
தத்து சொப்பனமுஞ் சுழுத்தியி லசத்தாந்
தன்மைபோற் சத்திலா திருக்குஞ்
சத்தபூரணமாய் நித்திய மாகித்
துலங்கிய சொரூபமாஞ் சிவோகம். (3)
பழுதைதன் னிடத்திற் பாம்புதோன் றுதல்
பரப்பிர மத்திடை யதனிற் [போற்
கழிதரு மஞ்ஞா னத்தினுற் சீவ
னுதித்திடக் கண்டவ னொருவன்

பழுதையென் றதனுற் சர்ப்பமோக மும்போ
பழுதையாய்க் கண்டது போல [யப்
வழுவில்தே சிகனூர் சீவனீ யன்றென்
றறைந்திட வாகினேன் சிவோகம். (4)

எமக்குமன் னியமா முலகமொன் றில்லை
யெவ்வுல கங்களெம் மிடத்திற்
சமித்துவுற் பவமா மாதலான் மாயை
வடிவம தேதெனிற் சாற்ற
வமைத்தகண் ணடிவிம்பமா நிழல்போல்
அடங்கியெம் மிடத்தினில் விளங்குந்
தமத்துவ மில்லாச் சச்சிதா னந்த
தற்பத விமலமாஞ் சிவோகம். (5)

சாக்கிர மதனி லிந்திரியங்கள்
தமக்குமேற் சாட்சியாஞ் சிவோகம்
தேக்குசொப் பனத்தி லுலகரூ பமதாய்ச்
செய்மனச் சாட்சியாஞ் சிவோகம்
தாக்கிய சித்த நாசமாஞ் சுழுத்தி
யவத்தையிற் சாட்சியாஞ் சிவோகம்
நீக்கமில் துரியா னந்தமாஞ் சர்வ
நிர்மல சாட்சியாஞ் சிவோகம். (6)

விவேக சட்கம் முற்றிற்று.

# ரிபு கீதை.

## 20-வது அத்தியாயம்.

அகண்டபரப் பிரமத்துக் கயலேயில்லை
அகிலமுமவ் வகண்டபரப் பிரமமென்று
மகண்டபரப் பிரமமது வகமே யென்று
மகமந்த வகண்டபரப் பிரமமென்று
மகண்டபர பாவனையே திடமாய்ச் செய்திவ்
வயலனுவுந் தோற்றும லழிந்த பின்பவ்
வகண்டபர பாவனையுஞ் செயாது தள்ளி
யானந்த வடிவாக வமர்ந்து நிற்பாய். (24)

உன்னியவவ் வாநந்த வடிவுந் தள்ளி
யுரமாக வொருவடிவே யாகிநிற்பா
யன்னியமி லொருவடிவென் பதையுந்தள்ளி
யதன்பின்பு நிர்க்குணமே யாகிநிற்பாய்
மன்னியவந் நிர்க்குணமென் பதையுந்தள்ளி
மனவாக்குக் கெட்டாத வடிவாய்நிற்பாய்
அன்னதையுந் தள்ளியபின் னறிவுமாத்ர
மாயதையு மிழந்தான்ம மாத்ரமாவாய்.

அன்னதையுந் தள்ளியபின் பிரமமாத்ர
மாயிடுவாய் மற்றதையுந் தள்ளியிங்கு
சொன்னவெலா மிழந்துவெறி தாகநிற்பாய்
சொன்னதையுந்தள்ளிமிகவெறிதாய்நிற்பா
பின்னுளமேமுதலியவோருபாதியின்றிப் [ய்
பேசவொணுச் சூனியமா நிலையினிற்பாய்
இன்னவித சூனியமு மிழந்தபின்ன
ரெவ்வடிவோ வவ்வடிவே யாகிநிற்பாய்.

நிற்பதெனுந் தன்மையுமே யிழந்தபின்னர்
நீயா யிருக்கின்ற சுபாவந் தன்னைச்
சொற்பமுமே வாக்காலு மனதினுலுஞ் [லே
சொல்லவொணுதெண்ணவொணுதாதலா
தற்பரமாஞ் சகசநிலை சார்ந்தபின்னர்
தான்ருனே தானுகத் தனித்திருப்பா
யற்பமுமேவிகற்பமிலாவவ்விருப்பை[லோர்.
யறைந்திடவு நினைந்திடவு மார்தான்வல்

சொல்லியவிவ் விதமாக வனைத்துந் தள்ளிச்
சுத்தபர வடிவாகிச் சுயமாய்நிற்பாய்
அல்லதெலாந் தள்ளலுமே யகண்டமான
வகமெனவே யகவரத மநுசந்திப்பாய்

எல்லையிலா வகண்டபரம் நானேயென்றிங்
கெப்போதும் பழகியவிவ் வநுசந்தானங்
கல்லெனவே திடமான நிருவிகற்பங்
கைவசமேயாகுவதிற் காரணங்காண். (23)

ஆதலினு லனைத்துக்கு மதீதமான
வகண்டபரப்பிரமமகமென்றெப்போதுஞ்
சாதகமாம் பாவனையே செய்தத்தாலே [தும்
சஞ்சலமாம்விகற்பமெலாந்தவிர்ந்தெப்போ
பேதமிலாப் பரப்பிரம ஞானியாகிப்
பின்னமிலாப் பரப்பிரம வடிவேயாவாய்
ஈதையலா லெளிதாக முத்திசார
வேதொன்றுமுபாயமிலை பிதுவேயுண்மை.

---

## அதர்வண வேதம்.

### சரஸ்வதி ரக்ஸ்ய உபநிஷத்.

என் (பிரமத்தி) னிடத்தில் ஜீவத் தன்மையும், ஈசுவரத் தன்மையும் கற்பிக்கப் பட்டிருக்கின்றன; வாஸ்தவத்திலில்லை.

# தத்துவ ஞானியே குருவெனல்.

## மனிடா பஞ்சகம்.

---

ஒருதினஞ் சங்கரா சாரியன் காசியில்
உத்தம வீதியிற் சஞ்சரிக் கும்பொழு
தொருவன்சண் டாளவே டந்தரித் தங்ஙனே
யூனமில் லாவிவன் ஞானஞ்சோ திக்கவே
திரிதரும் போதவன் றன்னையங் கன்னவன்
திட்டியாற்கண்டுநீயெட்டிப்போபோவெனப்
பரவிடும்வாக்கியங்கேட்டதற்குத்தரம் [வாம்
பறையனுந் தேவன்முன் பகர்ந்ததைப் பகரு

அன்னமே யாதியாம் பஞ்சபூ தத்தினால்
ஆக்கிய வுன்னுடை யாக்கையைப் பற்றியிவ்
வன்னமேயாதியின்காரியவாக்கையை [தோ
யணுகவொண்ணாதெனவெட்டிப்போவென்ற
பின்னமே தும்மிலாப் போதவான்மாவினைப்
பேணியான்மாவினைப்போவெனச்சொன்ன
பன்னிடும்பரமகஞ்சாச்சிரம யதிகளிற் [தோ
பரமனே யிவ்வித மென்றுநீ பகருவாய். (2)

அலையிலா வாரிபோற் சச்சிதா னந்தமா
மான்மவா காசமே யெங்கணு மசலமா
யெலையற நிற்கவிங் கந்தணன் புலையனென்
றிம்மகா பேதமெக் கலையினுற் கண்டதோ
விமலமாங் கங்கையி னப்பிலும் புலையர்தம்
வீதியி னப்பிலும் விம்பமாந் தன்மையா
னிலகுசொன் னக்குட மட்குடப் புணர்வினு
லிரவிவா னங்களி னேதுபே தஞ்சொலாய்.

சாக்கிரஞ் சொப்பன நித்திரை மூன்றிலுஞ்
சாட்சியாய்ப் பங்கய ஞதிதம் பாந்தமா
மாக்கைகடம்மிலுங் கோவையாய்ச்சாட்சியா
யச்சித்தி யாதொன்ரு காசமே போன்றிடுந்
தாக்கறுஞ் சித்ததே நானிந்தத் திரிசியந்
தானல வென்றுர நிச்சய முள்ளவன்
யோக்கிய வந்தண னீசன்ரு ஞகிலும்
முத்தவாசானென வென்மனே நிச்சயம். (4)

எந்தச்சித் துத்தனைத் தேவர்திர் யக்கொடு
விந்நர ரியாவரு மியானென வறிவரோ

வந்தசித்தொளியினுற்சடமனவிந்திய [தோ
வாக்கையெப்புலனுமே சித்தென வொளிர்வ
வந்தமே கத்தினுன் மறைவதா யிரவிபோல்
வளர்கர ணங்களான் மறையுமச் சித்தினேச்
சந்ததம் பாவித்துச் சுகமுறு மியோகிதான்
சாதியா லாரெனுங் குருவெனு நிச்சயம். (5)

பிரமநானென்னுடை மாயை முக்குணமதாற்
பேதமாஞ் சகபர சீவகற் பிதமதாம்
பரமபூ ரணசிதா காசநா னேயெலாம்
பரமநானொழியவோ ரணுவும்வேறின்றெனப்
பரசுக நித்தநின் மலநிரஞ் சனபரப்
பிரமநிச் சயவுர முடையனு ரோவவ
னருமையா மந்தண னீசன்று ளுகிலும்
அகிலவாசானென வென்மனோநிச்சயம். (6)

குரவன்வாக் காற்சக நசுவரம் பிரமமே
குற்றமி னித்திய மென்றுரங் கூர்ந்துபின்
ஹொருமையாய்நாடொறுமிடையறப்பிரமமே
யுணர்ந்துதானே தனிற்சாந்தமாஞ்சித்தனுய்ப்

புரிந்தமுன்வினையினைப் பௌடியவினையுடன்
போதமாம் வன்னியிற் றகனமே செய்துபின்
வருபிரா ரத்தத்துக் காக்கையையொப்பித்து
வானம்போ னிற்பவன் குருவென நிச்சயம்.

எந்தவின் பக்கட லேசலே சத்திறு
லிந்திர னாதிய ரின்பமுற் றுள்ளவ
ரெந்தவின் பந்தனை யோகிகள் சாந்தமா
மிதயமீ தெய்தியே யின்பமே லாகினு
ரந்தவின் பக்கட லுள்ளடங் கும்மனத்
தன்மையோன் பிரமமே பிரமவித் தல்லமற்
றந்தத்தே வேசரும் வந்திக்கும் பாதனு
மன்னவன் குருவென வென்மனோ நிச்சயம்.

---

## தத்துவாமிர்தம்.

### கலிச்சந்த விருத்தம்.

நித்தமொடு முத்தநிம லந்திகழ் பரத்தை
யுய்த்தகர முத்தமணி யத்திநிக ரொப்ப
மெய்த்திடவெவர்க்குமுண ரத்திகழுவிக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். (1)

சத்தமுறு பித்தினலை தட்டறவு ளத்தே
முத்தியெனுமப்பதமுழுத்திடநினைக்கிற் [ம்
கைத்தலநெலிக்கனியெனப்பொருள்விளக்கு
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். (2)

பத்திபதின் மெய்க்குரவ னற்பதம துற்றே
சித்தமொரு மித்துறவி னிற்றுறவி யற்றின்
மெய்த்துமுப ரத்துவப ரர்க்கதுவி ளக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். (3)

கத்ததுறு பித்தசம யக்கவலை விட்டு
நித்தபரமத்தையுணர்தற்றக நினைக்கின்
மெய்த்தொருகணத்தினில்வெளிப்படநிகழ்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். [த்தும்

மத்தமுறு பொய்ப்பவம யக்கறவு ளத்தே
மெய்த்தபரதத்துவம்வெளிப்படவெவர்க்கும்
சுத்தமணி நற்சுடர்வி ளக்கதுவெ றிக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். (5)

மூத்தமொடு நித்தமுறு சுத்தமது புத்த
வத்துவித மப்பரம மத்தினை யுளத்தே
யித்திறனெ னத்திகழு வித்திட விளக்கும்
தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம். (6)

## பிரமகீதை.

### தத்துவமசி வாக்கியத்தின் இலக்கியப்பொருள்.

அதுவென் றுரைசெய் பொருளா மதிலும்
நீயென் றுரைசெய் பொருளா மிதிலும்
மதிபண் ணிடவே றதுவா கியிடும்
அறிவா தியகா ரணமன் றியிலே
எதுவொன் றுமிலா தவையா வையுமா
யிதுவென் றிடுகே வலசித் தினையே
அதுநீ யெனும்வாய் மொழியா மதனால்
அறியும் படிசொன் னதிவ்வா ரணமே.

### வேறு.

தத்துவ மென்ற வார்த்தை யிரண்டுக்கும் பொருள தாகிச்
சித்துமெய் யாகி நின்ற திகழ்பர மொன்றாந் தன்மை
தற்பரந் தன்னி லுலே சித்திக்கு மென்பதே யிங்
கப்படி வாக்கி யத்தி னருத்தமே யாகு மன்றே.

வேறு.

நீயெனும்பொருளேயதென்றுநிகழ்த்திடும் பொருளாவதும்
தூயசிற்பர மேபதங்களி ரண்டினுந்துணி வாதலால்
மாயையென்றும வித்தையென்றமு பாதிபேதவ ழக்கினல்
ஆயகற்பித பேதமல்லத பேதமேபொரு ளாவதே.

ஆத்மானு சந்தானக்கிரமம்—தசகம்.

ஓதுமண்ணிலை யுதகமிங்கிலை யொளிருந்தேசிலை காலிலை
பூதவிண்ணிலை யிந்தியம்மிலை புகன்றவைகளின் றிரளிலை
யேதுமேவிப சாரமேவி யிறப்பதாலிச் சுழுத்தியின்
மீதியாயுள பூரணந்த மேனியான சிவோகமே. (க)

சாதியுமிலை யாச்சிரமமிலை சாதியாச்சிரம தருமமா
நீதியுமிலை தாரணையிலை நிதித்தியாசன யோகமே
யாதியுமிலை கற்பனையப வாதவாசிரய மாதலால்
சோதியாய்கிலை நின்றபூரண சுத்தரூப சிவோகமே. (உ)

தந்தைதாயிலை தேவருமிலை தங்குலோகங் களுமிலை
சந்தவேதங்க ளில்லையாகங்கள் சகலதீர்த்தங் களுமிலை
தொந்தமற்ற சுழுத்தியிற்றெருட ராதுநீங்குத லான்மகா
னந்தபூரண சத்யகேவல ஞானநித்த சிவோகமே. (௩)

பன்னுசாங்கிய சைவமுமிலை பாஞ்சராத்திர மும்மிலை
உன்னுசைனமீ மாஞ்சையுமிலை யுலகுண்மற்ற மதமிலை
துன்னுஞானிக ளநுபவிப்பிர சித்தமாய சொரூபமாய்ப்
பின்னமேயற நின்றபூரணப் பிரமமென்ற சிவோகமே. (௪)

பகருமேவிலை கீழிலைப்பர வுள்ளிலைப்புற முமிலை
அகலமேநடு வில்குறுக்கிலை யாகிழக்கிலை மேற்கிலை
ககனமென்ன நிறைந்தகண்டசிற் ககனகேவல ரூபமாய்ச்
சுககனச்சுக தாதிபேத விகீனசுத்த சிவோகமே. (௫)

வெள்ளையுமிலை கருமையுமிலை வேறுபீத சிவப்பிலை
குள்ளமுமிலை நெடியதுமிலை குறைபெருத்தலு மில்லையே
தள்ளியித்தனை ரூபமுந்தவி ராதசோதி சொரூபமா
யுள்ளபூரண ஞானவின்ப வுபாதிகீன சிவோகமே. (௬)

சாத்திரத்தனைப் போதிப்பானில்லை சாத்திரம் படிப்பானில்லை
சாத்திரமில்லை பாடமுமில்லை சாற்றுநீயில்லை நானில்லை
சாத்தியாதி சகத்திலச்சல மற்றுமிஞ்சுத லான்மகா
சாத்திரப்பொரு ளானபூரண சாந்தபோத சிவோகமே. (எ)

சாக்கிரமில்லை சொப்பனமில்லை சார்சுழுத்தி யில்லையிதில்
தாக்குவிஸ்வனில்லைதைசதனில்லை தங்குபிராஞ்ஞனுமில்லைமுன்
ருக்கையுமில்லை யவையவித்தை விகாரமாதலி னுலிவை
நீக்கிநின்றிடு துரியபூரண நித்தபோத சிவோகமே. (அ)

அதிவியாபகமாதலாலழிவற்றதத்துவமென்றதால் [ததால்
சுதசித்தப்பொருளானதாற்றனில்வேறென்றைத்தொடரா
சததமாயுள சிவமொழிந்திவண் சகமெனும்பொருளையில்லை
அதுவிதென்றுரைசெய்வதற்கரிதாமகண்டசிவோகமே. (கூ)

இல்லையேக மெனுஞ்சொலுமிரண் டென்றுசொல்லுவ தெங்
இல்லைகேவல மோடகேவல மில்லைசூனியா சூனியம் [நமே
எல்லையற்ற வகண்டசிற்சுக வேகபூரண வத்துவால் [வாம்.
தொல்லைவேதமுடிப்பொருடனைத் தோன்றவெப்படியோது

# அருணகிரிநாதர் அருளிய

## ஞானத் திருப்புகழ்.

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே

மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்துநாத

ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டுநாயேன்

யோகத்தைச் சேரு மாறுமெய்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ

ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப்பொற் பாதமே பணி கந்தவேளே.

காவியுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறி
காய்கனி துய்த்துங் காயமொ றுத்தங்
காசினி முற்றுந் திரியாதே
சீவனொடுக்கம் பூதவொ டுக்கம்
தேறவுதிக்கும் பரஞான
தீபவிளக்கங் காண எனக்குன்
சீதள பத்மந் தருவாயே. (2)

ஐந்து பூதமு மாறு சமயமு
மந்த்ரவேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப
அண்ட ராதிசரா சரமு முயர்
புண்டரீகனு மேக நிறவனும் [காலும்
அந்தி போலுரு வானும் நிலவொடுவெயில்
சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபமதாக வுறைவது சிவயோகம்
தங்க ளாணவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ரதாயமொடேயுநெறியது பெறுவேனோ

சுருதி மறைக ளிருநாலு
திசையி லதிபர் முனிவோர்கள்
துகளி லிருடி யெழு பேர்கள் சுடர்மூவர்
சொலவின் முடிவின் முடியாத
பகுதி புருட னவனாதர் [கள்
தொலைவி லுடுவி னுலகோர்கள் மறையோர்
அரிய சமய மொருகோடி
அமரர் சரணர் சதகோடி
அரியு மயனு மொருகோடி யிவர்கூடி
அறிய அறிய அறியாத
அடிக ளறிய அடியேனும்
அறிவு ளறியு மறிவூற அருள்வாயே. (4)

அஞ்சுவித பூத முங்கரண நாலு
மந்திபகல் யாது மறியாத
அந்தநடு வாதி யொன்றுமில தான
அந்தவொரு வீடு பெறுமாறு
மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர்
மங்கைதனை நாடி வனமீது
வந்தசர ணார விந்தமது பாட
வண்டமிழ் விநோத மருள்வாயே. (5)

காணொ ணாதது உருவோ டருவது
பேசொ ணாதது உரையே தருவது [பூதக்
காணு நான்மறை மூடிவாய்நிறைவது—பஞ்ச
காய பாசம தனிலே யுறைவது
மாய மாயுட லறியா வகையது
காய மானவ ரெதிரே யவரென வந்துபேசிப்
பேணொ ணாதது வெளிபோய் ஒளியது
மாய ஞாய னறியா வகையது [நாதப்
பேத பேதமொ டுலகாய் வளர்வது—விந்து
பேரு மாய்கலை யறிவாய் துரியவ
தீத மானது வினையேன் முடிதவ [நீயே.
பேறு மாயருள் நிறைவாய் விளைவது ஒன்று

அகல நீளம் யாதாலு
மொருவ ராலு மாராய
அரிய மோன மேகோயி லெனமேவி
அசைய வேக்ரி யாபீட
மிசைபு காம காஞான
அறிவி ரூத ராமோத மலர்தாவிச்
சகல வேத ஞதீத
சகல வாச காதீத
சகல மாக்ரி யாதீத சிவருப

சகல சாத காதீத
சகல வாச ஞதீத
தனுவை நாடி மாபூசை புரிவேனே. (7)

அடைபடாது நாடோறும்
இடைவிடாது போம்வாயு
அடையமீளில் வீடாகு மெனநாடி
அருள்பெருவனசார
கருமயோகி யாகாமல்
அவனிமீதி லோயாது தடுமாறும்
உடலம்வேறு யான்வேறு
கரணம்வேறு வேருக
உதறிவாச காதீத அடியூடே
உருகிஆரி யாசார
பரமயோகி யாமாறன்
உபயபாத ராசீக மருள்வாயே. (8)

ஊனே றெலும்பு சீசீ மலங்க
ளோடே நரம்பு கசுமாலம்
ஊழ்நோ யடைந்து மாசான மண்டு
மூனே டுழன்ற கடைநாயேன்

நாலு ரொடுங்க நாலுர் வணங்க
நாலுர் மகிழ்ந்து உனையோத
நாலு ரிரங்க நாலு ருணங்க
நாலுர் நடந்து விழநாலுர்
தானே புணர்ந்து தானே யறிந்து
தானே மகிழ்ந்து அருளூறித்
தாய்போல் பரிந்த தேனே டுகந்து
தார்வேணி யெந்தை யருள்பாலா
சாலோக தொண்டர் சாமீபதொண்டர்
சாரூப தொண்டர் பெருமாளே. (9)

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதி குருவாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே. (10)

முற்றிற்று.

## மகாநாராயணோபநிஷத்.

காரியகாரண (மாயை அவித்தை) உபாதியினாலே ஜீவேசுவரபேதம் காணப்படுகிறது. காரணோபாதியுடையவன் ஈசுவரன்; காரியோபாதியுடையவன் ஜீவன். பிரதிபிம்பங்களே ஜீவர்களென்று சொல்லப்படுகின்றன. சகலஜீவர்களும் அந்தக்கரணத்தை உபாதியா யுடையவர்களே, சகலமும்நீயே, சகலமும்நீயே, சகலமும் நீயே. நீயே மோக்ஷத்தைக் கொடுக்கிறவன், சகல மோக்ஷசாதனமும் நீயே.

---

## அத்வைததாரகோபநிஷத்.

ஜீவேசுரர்கள் மாயா சொரூபிகளென்று அறிந்து சகல விசேஷத்தையும் ஈதல்ல ஈதல்லவென விலக்கி எது மிஞ்சுகிறதோ அது அத்துவயப்பிரம்மம்.

---

# எசுர் வேதம்.

## ஷை முத்திகோபநிஷத்

### 1-வது அத்தியாயம்.

"அந்த ஆன்மா (ஆன்மாவென்னும் சொல்லுக்குப் பொருள் பிரம்மம்) வினிடத்திலிருந்து ஆகாய முண்டாயிற்று. ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவியு முண்டாயின.

### 2-வது அத்தியாயம்.

உபாதிநிவிர்த்தியான (மறைவுபோய் விட்ட) கடாகாசம் போலப் பிராரப்தம் நசிக்கிறதினாலே விதேகமுத்தி.

பூரணமாயிருக்கிற பிரம்மம் நான்.

### ஷை 3-வது அத்தியாயம்.

பூமியைச் சலத்திலும், சலத்தை அக்கினியிலும், அக்கினியை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலும், ஆகாயத்தை

அகங்காரத்திலும், அகங்காரத்தை மகதத்துவத்திலும், மகதத்துவத்தை அவ்யக்தத்திலும், அவ்யக்தத்தைப் புருஷனிலும், கிரமமாக லயிக்கச் செய்கிறான்.

முக்திகோபநிஷத் முற்றிற்று.

## ஷை கடோபநிஷத்.

### 5-வது வல்லி.

எல்லா லோகத்திற்கும் கண்ணாயிருக்கிற சூரியன் எப்படிக்கண்ணுக்குத்தோற்றுகிற வெளித்தோஷங்களாலே ஆக்கிரமிக்கப்படுகிறதில்லையோ, அப்படியேஒருவனாயிருக்கிற விலட்சணமான பரமாத்துமா எல்லா ஜீவர்களுக்கும் அந்தராத்மாவாயிருந்தாலும் உலகத்தின் துன்பத்தால் பரிசிக்கப்படுகிறதில்லை.

கடோபநிஷத் முற்றிற்று.